# அப்பா

## 1

விடை கொடுக்க யாருமே இல்லாத ஒரு ரயில் நிலையத்தில் தனியே பயணப்படக் காத்திருப்பது சுகமான அனுபவம், வேறு மனிதர்களுக்கு விடை கொடுப்பதை, வேறு மனிதர்களை விடைபெறுவதை அவர்கள் வித்தியாசப்படுவதை கவனித்து ரசிக்க முடியும்.

''போய் லெட்டர் போடு.'' ஒரு கிழவி சன்னல் கம்பியை இறுக்கப் பற்றிக் கொண்டு நின்று கொண் டிருந்தாள். அவள் அப்படி இறுக்கப் பற்றியிருந்தது விழுந்து விடாமல் இருக்கத்தான் என்று எனக்குப்பட்டது.

''எத்தினி தடவை இதையே சொல்லுவ. அடுத்த ஸ்டேஷன்ல இறங்கி உனக்கு ஒரு லெட்டர் போட்டுர்றேன்.''

''அதில்லடா, ஊர் போய்ச் சேர்ந்ததும் சௌகர்யமா போய்ச் சேர்ந்தேன்னு ஒரு லெட்டர் போடு.''

''போடறேன். கம்பி புடிச்சு நிக்காத. வண்டி எடுத்துரப்போறான். தாவாக்கட்டைல அடிபடப் போவுது''

- ஆனால், கிழவி நிதானமாகத்தான் கம்பியைப் பிரித்தாள்.



ஆனால், கோத்துக் கொண்ட கைகளைப் பிரிக்காமல் கணவனும் மனைவியுமாய் இன்னொரு ஜன்னலில் இருந்தார்கள். மனைவி பயணப்படுவது கணவனுக்குத் தாங்கவில்லை போலிருக்கிறது. வெளியூரில் அவள் உத்தியோகம் பார்க்கிறாள் போலிருக்கிறது. புருஷனுக்குச் சென்னையில் பிடுங்கி கத்தை கட்டுகிற வேலை இருக்கும் போலிருக்கிறது. பொருள் தேடிப் பிரிவோர் கணவனாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. எப்பொழுதும் பிரிந்து போகிறவராய்த்தான் என் கணவன் இருக்கிறான். எப்பொழுதும் பிரிவால் துயரப்படுகிற மடைச்சியாக நான் இருக்கிறேன். என்னைப் போல் உலகத்தில் எல்லா பெண்களும் பொருள் தேடிப் பிரியும் கணவனை உடைய முட்டாள் பெண்களாகத்தான் இருக்கிறார்கள். ஏன் இப்படி என்கிற விதமாய் ஒரு பழந்தமிழ்ப் பாடல் உண்டு. ஆனால், தமிழ், தமிழ்தேசம், தமிழர் வாழ்க்கை மாறிவிட்டது. பொருள் தேடி பெண்கள் பிரிய, ஆண்கள் கைப்பிடித்து விடை கொடுக்க வேண்டியிருக்கிறது.

''நாளைக்கு ட்யூட்டியில் ஜாய்ன் பண்ணலேன்னா சாவடிச்சிடுவான். ரெண்டு மாசம் லீவு போட்டாச்சு. இதுக்கு மேல முடியுமா? ஒரு ரெண்டு மாசம் வொர்க் பண்ண ஆறு நாள் லீவு கணக்குல சேர்ந்துடும். சனி, ஞாயிறு சுதந்திரதினம் மூணு நாள் சேர முன்னாடி ரெண்டு சனி, ஞாயிறு சேர, பதினோரு நாள் எப்படா வரும்னு ஓடி வந்துருவேன்.'' மனைவி பேசிக் கொண்டிருக்க, அந்தக் கணவன் உண்மை தெரிந்தும், உண்மையை ஏற்க முடியாமல் இப்பவே ஆறு நாள் கிடைக்காதா என்று ஏக்கத்தோடு நின்றிருந்தான். இதைப் பற்றி யாரும் கவிதை எழுதியிருக்கிறார்களா என்று தெரியவேயில்லை. புருஷனோடு இரண்டு மாதம்

குடித்தனம் செய்துவிட்டு ஆபீஸ் வேலைக்காக ஊருக்குப் போக வேண்டிய மனைவியைப்பத்தி எந்தக் கணவனாவது கவிதை எழுதியிருக்கிறானா தெரியவில்லை.

ஆனால், இப்படிப் பிரிவு இல்லாது பிரிகிறோமே என்கிற வேதனை இல்லாது ஊருக்குப் போவது ஒரு சுகம். நாளைக்காலை நான் மதுரைக்குப் போக வேண்டும். மாலை ஒரு கூட்டத்தில் பேச வேண்டும், பிறகு இரவு வண்டி ஏறி சென்னைக்கு வந்து சேரவேண்டும். ஒரு நாள் புருஷன் பிரண்டல் இல்லாமல் நிம்மதியாக இருக்கலாம் என்பது என் மனைவியின் எண்ணம். ஹாலுக்குள் அகப்பட்ட குப்பைக் காகிதமாய் சென்னையிலேயே சுற்றிக் கொண்டில்லாது வேறு இடம், வேறுமுகம் என்கிற மாறுதல் வேண்டிய என் தாகம் துயரம் தராதுபோயிற்று. சந்தோஷம் கொடுத்தது.

நாலு மாசம் வெளியூர் சென்றபோது என் வீடும் விம்மியிருக்கிறது. நானும் விக்கித்துப் போய் இருக்கிறேன். பிரிவை உணரும்போது மட்டுமல்ல, வேடிக்கை பார்க்கிற போதும் லேசாய் ஒரு வேதனை இருக்கத்தான் செய்கிறது. பெட்டியில் ஏறி எட்டிப் பார்க்க, எல்லா ஜன்னலிலும் பிரிவுத் துயரம் ஒரு வெப்பக் காற்றாய் அலைமோதிக் கொண்டிருந்தது. ரயில் கிளம்ப சில நிமிடங்களே இருந்தன. தூக்க முடியாத சுமையுடன் யாரோ சிலர் இருக்கை தேடி ஓடினார்கள்.

''நான் சொன்னனா இல்லையா... இந்த பஸ் லேட்டா யிருச்சுன்னா இந்த ட்ரெயின் மிஸ் ஆயிடும்னு.'' - கனத்த பெட்டி ஆள் தனக்குத்தானே பேசிக்கொண்டு ஓடினார், ஆனால், அவர் தனக்குத்தானே பேசவில்லை. அவரை வேடிக்கை பார்க்கிறவர்களுக்காக பேசினார். இவ்வளவு பெரிய பொட்டிய தூக்கிட்டு கடைசி நிமிடத்தில் ஓடி



வரியேடா, நீயெல்லாம் என்ன ஜென்மம் என்று யாரும் கண்ணால்கூட சொல்லி விடலாகாது. சொன்னால் இது தான் பதில் என்று தனக்குத் தானே பதில் சொல்லிக் கொண்டு ஓடினார். மனிதர்கள் இவ்விதம்தான். தாங்கள் செய்கிற எல்லாவற்றிற்கும் அவர்கள் பதில் வைத்திருப்பார்கள். நான் லேட் இல்லை. பஸ் லேட் என்று சொல்வார்கள் . இந்த சமாதானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். பிரிவு ஒரு பெரிய துயர் என்பதும் ஒரு சமாதானம்தான். எப்போது ஒன்றுசேர்ந்தோம். பிரிவதற்கு... என்று யாரும் கேட்டுக் கொள்வதில்லை.

அப்படி ஒன்றாகி இருந்துவிட்டால், இருப்பும், பிரிவும் முக்கியமில்லை. பிரிகிறவர் எல்லோருக்குள்ளும் பிணக்கு இருக்கிறது, இருந்தாலும் பிரிவு துயரமாகிறது.

''பத்து ரூபா சினிமா போறதுக்கு கேட்டா கிழவி இல்லேன்னுச்சு இதுக்கு ஒரு நோவுன்னா நாம எத்தினி கஷ்டப்படறோம்'' என்று பிள்ளை சொல்லியிருக்கலாம்.

''ஒரு ரசம் வைக்கத் தெரியலை. உனக்கெல்லாம் ஒரு கல்யாணம், கருமாதி...''

''உன்னைக் குத்தம் சொல்லிப் புண்ணியமில்லை. உங்கம்மாவ சொல்லணும். அம்பத்தஞ்சு வயசுக்கு இப்படி பவுடர் போட்டுட்டு வந்து நிக்கறா, பார். அவவளர்த்த பொண்ணு ரசம் இப்படித்தான் இருக்கும்.'' இந்தக் கணவன் மனைவிக்குள்ளேயும் பிணக்கு வந்திருக்கும். ஆனால் பிணக்கு மறந்து போயிற்று. பிரிவு முதன்மையாயிற்று. மறதி... மறதிதான் வாழக்கையின் ஜீவநாடி. நிறைய பிணக்குகள் மறந்து போகின்றன. நிறைய கோபங்கள் மறந்து போகின்றன. நிறைய வன்மங்கள் இந்த மறதியால் குறைந்து போகின்றன. இந்த மறதிக்கு பிரிவு காரணமா?

அல்லது பிரிவால் பிணக்குகள் மறந்து போயிற்றா? இல நெய் தொன்னை விஷயம். சுடராய் நிற்க முடியாதுதான். குறை சுடரைச்சுற்றி புகைமண்டி ஹரிக்கேன் லாம்ப் கண்ணாடி முழுவதும் படிந்து கறுப்பாகி சுடர் உள்ளே இருப்பினும் வெளியே வெளிச்சம் இல்லாது போகிறது. புகை இருட்டு போல வாழ்க்கையிலும் ஒரு மயக்கம் ஏற்பட்டுப் போகிறது. எல்லா மனிதர்களும் இங்கே கறுப்பு புகை படிந்த ஹரிகேன் லாம்புகள். ஒரு சிலரே தன்னைச் சுத்தமாய் துடைத்துக் கொள்கிறார்கள்.

வண்டி கிளம்புவதற்கான ஆம்பர் விழுந்தது. ரயில் புறப்படலாம் என்று டிராக் சிக்னல் கொடுத்துவிட்டது. பச்சைவிளக்கு காட்டப்படவில்லை "ஸ்ரீனிவாசன் இந்த வண்டிலயா போறீங்க?" யாரோ என் காலடியில் பெட்டியை வைத்தார்கள். வேறு யாரையோ கைதட்டி அழைத்தார்கள். தட்டல் தனக்குத்தான் என்று உணர்ந்தவர் ஓடி வந்தார்.

அப்படி வந்தது கோவிந்தராஜன். சினிமா டைரக்டர் கோவிந்தராஜன். அவன் முதல் படம் நாளை வெளி வருகிறது. சென்னையிலுள்ள கப்பல் போன்ற நாலு தியேட்டர்களில் பானர் ஏற்றி கட்டியாகி விட்டது.

"சீனு... இந்த வண்டில போறீங்களா?" கோவிந்தராஜன் கேட்டான். அவன் முப்பது வயசு முகத்தில் வியர்வையும் களைப்பும் தெரிந்தன. லேசாய் கலவரமும் இருந்தது.

"ஆமாங்க. மதுரை பே'ாறேன். மீட்டிங்குக்காக." நான் தரையிறங்கினேன்.

"நேத்து உங்க படம் பார்த்தேன் கோவிந்தராஜன். உங்களைப் பார்க்க முடியலை, வேறு தியேட்டர்ல



இருந்தீங்களாம். பிரிவியூ தியட்டர்லேயே கைதட்டி ரசிச்சாங்க. தியேட்டர்ல நல்ல ரெஸ்பான்ஸ் இருக்கும், படம் நல்லா இருக்கும் கோவிந்தராஜன்."

"நன்றி சார். ஒரு சின்ன ரிக்வெஸ்ட்."

கோவிந்தராஜன் தயங்கினான். பெட்டி தூக்கி வந்த வரைப் பார்த்தான்.

"என்ன சொல்லுங்க?" நானும் ஒரு கலவரம் உணர்ந்தேன்.

"நாளைக்கு நீங்க மதுரை நிச்சயம் போயாகணுமா? முடிஞ்சா உங்க டிக்கெட்ல நான் டிராவல் பண்ணிரட்டுமா? தப்பா நினைக்காதீங்க, சீனு சார்!"

"மீட்டிங் இருக்கே. என்ன விஷயம்?"

"கோவிந்தராஜ் அப்பா தவறிட்டாராம். இப்பதான் போன் வந்தது. பஸ்ல ஏகக் கூட்டம். எப்படியாவது ஏத்தி வுட்ரணும்னுதான் இங்க கூட்டியாந்தேன்."

"ஐயோ!" என்று நான் உறைந்தேன். மொத்தமும் யோசித்து ஒரு முடிவு எடுக்க சில வினாடிகள் தேவைப் பட்டன.

"வேற பொட்டி பார்க்கலாமா" என்று கோவிந்த ராஜன் பரபரக்க, நான் என் முடிவை வெளியிட்டேன். "என் டிக்கெட்ல நீங்க போங்க. நான் காலைல வைகைல பிரயாணம் பண்ணிக்கிறேன். எனக்கு சாயங்காலம்தான் மீட்டிங் இருக்கு. நான் என் பொட்டிய எடுத்தாந்துர்றேன். டி-ல லோயர் பர்த். உள்ள வாங்க கோவிந்தராஜன். நான் மீண்டும் வண்டி ஏற, "சட்டப்படி இது தப்பு சார்" குரல் கேட்டது. டிக்கெட் பரிசோதகர் பின் கை கட்டி நின்றிருந்தார். நானும் கோவிந்தராஜனும் அவரை

வெறித்துப் பார்த்தோம். கூட வந்தவர் ஏதோ சொல்ல ஆரம்பிக்க, டிக்கெட் பரிசோதகர் கை உயர்த்தினார்.

''ஆனா, சட்டம் போட்டது மனுஷாதானே. எல்லா மனுஷாளுக்கும் மனசு உண்டே. அப்பா அம்மான்னு உறவு உண்டே'' அவரே பேசினார்.

''ஏ-ல அப்பர் பர்த். ஒரு ஆள் வரலை. இதுவரைக்கும் வராதவரு இன்னும் ஒரு நிமிஷத்துல வருவார்னு எனக்கு தோணலை. லெட் அஸ் வெயிட்.'' நாங்கள் எல்லோரும் கோவிந்தராஜனைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருக்க, பச்சை விளக்கு தெரிகிறதா என்று டிக்கெட் பரிசோதகர் பார்த்துக் கொண்டிருந்தார். பச்சைவிளக்கு தொலைவில் ஊசலாட, கோவிந்தராஜன் வண்டி ஏறினான். டி.யிலிருக்கிறவர் 'ஏ' க்கு போக, எனக்கு எதிரே அமர்ந்தான். மாம்பலத்தை வண்டி கடக்க டிக்கெட்டுக்கான கூடுதல் பணத்தைச் செலுத்தினான். ''நாளைக்கு உங்க படம் ரிலீஸ். உங்க முத படம் ரிலீஸ். இப்ப போயி இந்த மாதிரி... ரொம்ப துக்கம் உங்களுக்கு.'' நான் சம்பிரதாயமாகப் பேசி மௌனம் கலைத்தேன். கோவிந்தராஜன் மெல்ல சிரித்தான். ஒருவேளை இவன் அப்பா சாகவில்லையோ... பொய் சொன்னானோ. ஒரு பயம் திக்கென்று என்னுள் பரவியது.

''சாகிறபோதுகூட எங்கப்பா எனக்கு நல்லது பண்ணல சார். அது நினைச்சாதான் சிரிப்பா இருக்குது...''

''உங்கப்பா நல்லவர் இல்லையா?''

''ரொம்ப நல்லவர் சார்! ஊருக்கு நல்லவர்.'' ஒரு கதை, அங்கு ஓடும் ரயிலில் ஜன்னல் வழியே வந்த காற்று மாதிரி சுழன்று வந்தது.



## 2

ஒரு நல்ல வியாபாரிக்கு கடைன்னு ஒரு விஷயம் வேணுமா? கடை வச்சாதான் வியாபாரியா? கடையில்லாத வியாபாரம் செய்யக்கூடாதா? செய்யணும். அப்படிச் செய்யறதிலதான் சிறப்பு அதிகம். கொத்தவால் சாவடில கடைன்னு ஒண்ணு வைக்கணும்னா எவ்வளவு காசு வேணும். பகடி, அட்வான்ஸ் வாடகைன்னு எவ்வளவு அழுவணும்? அந்தக் காசை அங்குள்ள இடுக்கி மார்க்கெட்டுக்கு நடுவுல கண்ணையும் காதையும் திறந்து வச்சுக்கிட்டுப் போணம்னா அழகா வியாபாரம் பண்ணலாம். நாலு வருஷமா நான் அப்படித்தான் பண்றேன். நான் கடையில்லாதவன்தான். ஆனா, எந்தக் கடை ஏறினாலும் எனக்கு மரியாதை உண்டு.

நேத்திக்கு அப்படித்தான் வெங்கடேச முதலியார் கடைக்குப் போனேன். அவருக்கு அரிசி வியாபாரம். இறக்கி கடைக்குள்ள வைக்க முடியாதபடி ஏழெட்டு மூட்டை தங்கிப்போச்சு.

''என்ன வெங்கடேசா! அரிசியை பிளாட்பாரத்துல இறக்கிவச்சிருக்கே''ன்னு கேட்டேன். உள்ள இடமில்லைன்னான். நீ அடுக்கினது தப்பா இருக்கும்னு உள்ள எட்டிப் பார்த்தேன். கடைல கால்வாசி இடம் செங்கல் அடுக்கி வச்சிருக்கு. அரிசியில செங்கல் பொடி கலக்கலாமா? எனக்கு தெரியாதேன்னு கேட்டேன். வெங்கடேசனுக்கு ரொம்ப கோபம் வந்திருச்சு. கடை செவுரு கட்ட ஒரு வருஷம் முன்னாடி வாங்கிப் போட்ட செங்கல் இது. எடுத்துக்கறேன்னு அட்வான்ஸ்

கொடுத்தவன் வாங்கிட்டு போவலை. எதிர்க்கடை வாடகைக்கு எடுத்தா அங்க குறுக்கு செவுரு கட்டலாமேன்னு வச்சிருந்ததா சொன்னான். எதிர்க்கடை வாடகையும் படியலை. இதுவரைக்கும் இவ்வளவு அரிசி மூட்டை இறங்கினதில்லை. இப்ப இறங்கினதும் திணறிப் போயிட்டான். செங்கல் நான் எடுத்துக்கறேன்னு சொன்னேன். அவனுக்கு ரொம்ப சந்தோஷம்...

''எப்ப எடுத்துக்கறே''ன்னு கேட்டான்.

''இப்பமே இன்னும் அரை மணி நேரத்துல எடுத்துட்டுப் போயிடறேன்''னு சொன்னேன்.

எனக்கு செங்கல் தேவையில்லை. ஆனா எவனுக்காவது தேவைப்படும். வேற ஒருத்தனுக்கு தேவைப்படறது நமக்கு எப்படித் தெரியும். கடைலயே உட்கார்ந்திருக்கக் கூடாது. சுத்தணும். நான் இன்னொரு தடவை சுத்தினேன். மிளகாய் விக்கிறவன்கிட்ட போய் குறுக்கு செவுரு கட்டிடு. உன்கிட்ட சரக்கு இருக்கறது வெளில தெரியக்கூடாதுன்னு சொன்னேன்.

''ஆமாம், செய்யணும். கையே வரலை''ன்னு சொன்னான். சாமானை வாங்கி வச்சுட்டா செய்யணும்னு தோணிடும். ஒத்தக் கல்லு செவுருதான். ஒரு இடத்துல செங்கல் இருக்கு. எடுத்தாந்துரட்டுமான்னு கேட்டேன். கல்லு பாக்கணுமேன்னான். நல்லா இல்லாட்டி திருப்பிடலாம்னு சொன்னேன். அரிசிக்காரன் கிட்ட கல்லு எடுத்துட்டுப் போறதுக்கு கூலி கேட்டேன். மிளகாக்காரன் கிட்ட கல்லு எடுத்துட்டு வரணும்னு கூலி கேட்டேன். அரிசிக்காரன்கிட்ட கல்லு எட்டணான்னு வாங்கினேன். மிளகாக்காரன்கிட்ட கல்லு முக்கா ரூபாய்னு வித்தேன். நானூத்தி நாப்பது கல்லு. கல்லுக்கு கால் ரூபா லாபம்.



அதுதவிர ஒரு கூலி மிச்சம். முக்கா மணி நேரத்தில் ரெண்டு தெருவுக்கு நடுவுல காசு சம்பாதிச்சேன். இப்ப அரிசிக்காரன் சிநேகிதம் கிடைச்சது. மிளகாக்காரன் சிநேகிதமும் கிடைச்சுது. ஒரு வாரம் கிரெடிட்ல எத்தினி மூட்டை மிளகான்னாலும் நான் வாங்கலாம். ஒரு வாரத்துல தரேன்னு சொல்லிட்டு அரிசிக்காரன்கிட்ட ரெண்டு வாரத்துக்கு இழுத்தடிக்கலாம். ''உனக்கு அரிசி வேணுமா சொல்லு கையில காசு. வாயில தோசை. நான் கடன் தர முடியாது.''

காசு கொட்ட கடும் உழைப்பும், வாய்ச்சவடால் மட்டும் போதாது. அதிர்ஷ்டம் வேண்டும். அருணாசல முதலியாருக்கு அதிர்ஷ்டம் இருந்தது. வக்கணையான பேச்சு இருந்தது. அயராத உழைப்பு. இருந்தது. அவருடைய வெள்ளைச் சட்டைக்கு உள்பக்கம், வெளிப்பக்கம் வயிறு பக்கம் பாக்கெட்டுகள் இருந்தன. அவை முழுவதும் நோட்டுக் கற்றைகளால் நிரம்பி வழிந்தன. அவர் எது தொட்டாலும் சிறந்து விளங்கியது. எந்தக் கோணலும் சீராயிற்று.

ஒரு லட்சம் ரூபாய் கடன் வேண்டுமா? ஐந்தாயிரம் கமிஷன் இப்பவே கொண்டா. கடன் வேண்டுபவனுக்கு கடன் கொடுப்பவனைக் காட்டிக் கொடுப்பார். கடன் தருபவனிடம் ஐம்பது ரூபாய் வாங்கிக் கொள்வார்.

''இது பெங்களூர் கத்திரிக்கா பார்ட்டி. மழையில ரெண்டு லோடு மாட்டிக்கிச்சு. முக்கா லாரி காயும் குப்பைல கொட்டும்படியாயிடுச்சு. இப்ப லாரிக்கு கொடுக்கக்கூட காசு இல்லை. அடுத்த லோடுக்கு துட்டு கட்டணும். தவிக்கிறான். பயப்படாத கொடு. இது சீஸன். பத்து லோடு நஷ்டம். மீட்டுருவான். என்னா... மழையில மாட்டாத இருக்கணும். இன்னும் ஒரு வாரம்தான் மழை இருக்கும். ஆயிரம் ரூபா குடுத்து ஒரு ஆளை பெங்களூருக்கு அனுப்பச்

சொல்லி இருக்கேன். இறக்கி ஏத்தறப்ப ஈரம் படாத மேற்பார்வையா கொண்டார சொல்லிருக்கேன். தார்ப்பாய் லாரியா மூணு பேசி மாச காண்ட்ராக்ட் எடுத்துருக்கேன். இனிமே ஈரம் படாது. நீ தைரியமா ஒரு லட்ச ரூபா குடு.''

காசு வாங்கி கரன்ஸிக் கற்றையை பேப்பரில் சுற்றி எண்ணிக் கொள் என்று பெங்களூர் கத்திரிக்காகாரனிடம் போட்டு அவனை சந்தோஷப்படுத்தினார்.

''நீ கொடுன்னு சொன்ன. நானும் கொடுத்துட்டேன். பார்ட்டி இடிக்கிறாப்பலே ஆயிடுச்சுன்னா என்னா செய்யறது?''

''பயப்படாதம்மா. அம்பாஸடர் கார் ஆர்.ஸி. புக் என்கிட்ட இருக்கு. அடி மாட்டுக்கு வித்தாலும் ஒண்ணரை ரூபா போகும். வேணா நீ வச்சுக்க.''

தன்னிடம் டாக்ஸியா ஓடும் வண்டியின் ஆர்.ஸி. புத்தகத்தை எவனோ கடன் வாங்கினதுக்காக காப்பு அடமானமாய் கடன் தந்தவர்களிடம் கொடுத்தார். தந்தவனுக்கு ஏதோ ஒரு பிடிப்பு வந்ததில் சந்தோஷம். கடன் வாங்கினவனுக்கு அருணாசல முதலியாரின் உதவியில் பேரானந்தம்.

என்ன ஒரு சங்கடமெனில், வண்டியில் இருக்க வேண்டிய ஆர்ஸி. புக் அடமானமாய் எங்கோ இருக்கிறது. இந்த ஒரு மாதத்தில் வண்டிக்கு எதுவும் ஆனாலோ, கடன் வாங்கியவன் செத்தாலோ பேரபாயமாய் ஒரு சோதனை புறப்படும். ஆனால், புறப்படவில்லை. அப்படி புறப்பட்டதுமில்லை. கடைசி தவணை வட்டியோடு வாங்கிக் கொடுத்துவிட்டு ஆர்.ஸி. புக்கை மீட்க, வாங்கியவனுக்கும் கொடுத்துவனுக்கும் அருணாசல முதலியார் ஒரு நாணயஸ்தர் என்பதாய் புலப்படும்.



''ஐயாயிரம் கமிஷனுக்குத்தான் அருணாசலம் துட்டு வாங்கிக் கொடுத்தான்... அதுதான் இந்த காலத்துல யார் செய்வா.. சொல்லுங்க. மொத்தமும் கொடுத்த பிறகு கேள்விப்பட்டேன். எனக்கோசரம் தன் வண்டிய அடமானமா வச்சானாம் அங்க. ஒரு வார்த்தை சொல்லியிருந்தா என் வண்டிய நான் அடமானம் வைக்க தந்திருக்க மாட்டேன்.''

ஒண்ணரை ரூபா வட்டிக்கு ஒரு ரூபா கடன் கொடுக்கறதுக்கு இவரு யாரு? ஊர்ல எவன் வேணா கொடுப்பான். உனக்கு கடனைக் கொடுத்துப்புட்டு பார்ட்டி இடிக்காதேன்னு கேட்டான். எனக்கு வெறுப்பா போச்சு. வியாபாரம்னு ஒண்ணு வந்தா, அதுல இடின்னு இல்லாத போவாது. எவனுக்காவது நூறு வயசு கேரண்டி கொடுக்க முடியுமா? அது போலத்தான் வியாபாரமும். கொடுத்தவனுக்குப் புரியலை. நீ கூவாத இருடா! என் ஆர்.ஸி. புக்கை தூக்கிப் போட்டேன்.

லோடு கெட்டுப் போயிடுச்சு. அதுக்கு நீ என்னா பண்ண முடியும். நேரத்துக்கு துட்டு கெடச்சுதே. அத்த சொல்லு. மனுஷாளுக்கு மனுஷா இதுகூட செய்யாத எப்படி? நாளைக்கு எனக்கு ஒரு கஷ்டம்னா உன்கிட்ட நான் வரமாட்டேனா. நீ செய்ய மாட்டியா?''

செய்தது அனைத்தும் அன்போடு செய்ததாய் சொல்லப்படும். ஐயாயிரம் கமிஷன் மறந்தே போகும்.

இதே வாய் கடன் கொடுத்தவனிடம் வேறு விதமாய் பேசும்.

''காசு வேற... நட்பு வேற... வியாபாரம்னு வந்துட்டம்னா அண்ணந்தம்பியா இருந்தாலும் ஒரு கணக்கு இருக்கணும். அப்பன் புள்ளையா இருந்தாலும் ஒரு வரைமுறை இருக்கணும். பெங்களூர் கத்திரிக்காக்காரன்

எனக்கு தெரிஞ்சவன். காசு குடுத்துருவான்னு எனக்கு தெரியும். உனக்கு தெரியுமா? ஒரு லட்சரூபாங்கறது பெ... உன் கேள்வி தப்பே இல்லே. உன் இடத்துல நா இருந்தாக்கூட பார்ட்டி இடிக்குமான்னுதான் கேப்பேன். இடிக்காதுன்னு வாய்ப் பேச்சா சொல்றது ஒரு வ... இடிச்சா இதை வச்சுக்கன்னு ஆர்.ஸி. புக்கை தூக்கி போடறது. ஒரு நம்பிக்கை. நாளைக்கு எனக்கு தேவை பட்டது. ஒரு லட்ச ரூபா வேணும்னு உன்கிட்ட கேட்டேன்னா அப்ப இதவிட தைரியமா எனக்கு குடுப்பல்ல. ஆர். ஸி. புக்கை கொடுத்தாக்கூட வேணாம் வச்சுக்கன்னு சொல்லுவேல்ல? கடன் அடைஞ்சு போச்சு. ஆர்.ஸி. புக்கைத் திருப்பித் தரவேணாம். உன்கிட்டே இருக்கட்டும். லோக்கல்ல ஓடற டாக்ஸிக்கு ஆர்.ஸி. பு... என்னா? எவன் கேக்கப் போறான். எப்பன்னா வெளியூர் போகவேண்டியிருந்ததுன்னா அப்ப வாங்கிக்கறேன். திரும்பியதும் கொண்ணாந்து கொடுத்துர்றேன். அது உன்னோட இருக்கிற வரைக்கும் எம்மேல ஒரு தைரியம் இருக்குமில்ல.''

ஆர்.ஸி. புக் வாங்க மறுத்துவிட்டு கோலா குடித்து விட்டு வந்தார்.

''நல்ல பார்ட்டியா இருந்தா சொல்லுங்க அருணாசலம்.'' லேவா தேவிக்காரர் கைகூப்ப, ஒன்றுக்கு நாலு பார்ட்டி கூட்டி வந்தார். ஒரே ஆர்.ஸி. புக்கில் பல லட்சம் கடன் வாங்கினார். எல்லாவற்றுக்கும் கமிஷன் வாங்கினார். ஒரு பார்ட்டியும் இடிக்கவில்லை. ஒன்றுகூட தாவா சொல்ல... சொல்லவில்லை. ஒரு வட்டிகூட பிறழவில்லை. வெறும் பேச்சாலேயே கமிஷன் கதவு திறந்ததும் வீசுகிற காற்று போல பைக்குள் புகுந்தது. இன்னதுதான் வியாபாரம் என்றில்லை. எல்லா வியாபாரத்திலும் அவர் இருந்தார்.



...டு, ஆஸ்பெஸ்டாஸ், பெங்களூர் கத்தரிக்காய், பச்சை ...காளி, குண்டூர் மிளகாய், நெல்லூர் அரிசி, வாழை இலை, ...றிவேப்பிலைக்கிளை, பங்கனப்பள்ளி, பாதாம் பருப்பு என்று எதையும் வாங்கி, எதையும் விற்று, எல்லா சூட்சுமமும் அவருக்குத் தெரிந்திருந்தன.

நடைபாதை வியாபாரிகள் சங்கம் அமைக்க அவரே கௌரவ ஆலோசகராய் இருந்தார். தலைவருக்கு ஒரு வியாபாரியை வாலிபராய் நிறுத்தினார். பொருளாளராய் ஒரு பெரியவரை நியமித்தார். ஆனால், அவர்கள் அவரை அழைக்கும்போது தலைவரே என்று அழைக்கும்படி பார்த்துக் கொண்டார்.

''தலைவரேன்னு கூப்புடறாங்க. உன் குரலுக்கு கட்டுப்படறாங்க. உன்கிட்ட பிரச்சினை கொண்டாந்து நீட்டுக்கறாங்க. அப்ப நீயே ஏன் தலைவரா இருக்கக் கூடாது? ஒண்ணும் தெரியாத முரட்டுப் பையனை தலைவரா போட்டுப்புட்டு 'நீயேன் ஒதுங்கிட்ட?'' அவரை யாரோ கேட்டார்கள்.

அருணாசல முதலியார் வேட்டியை மடித்துக் கொண்டு வில்ஸ்ஃபில்டரை பற்ற வைத்துக் கொண்டார்.

''அந்தக் கூட்டத்துல எவனுக்கு என்னா தெரியும். அங்க யார் முரடனில்லை? இருக்கறதுலேயே முரடனாப் பார்த்து ஒருத்தனை தலைவரா போட்டேன். அப்பத்தான் அவன் அடங்குவான்னு எனக்குத் தெரியும். இருக்கறதுலேயே நல்லவனா பார்த்து பொருளாளராய் போட்டேன். அப்பதான் சங்கம் உருப்படும்னு தெரியும். அவங்க போலீஸ் கேஸ்னு அடிக்கடி போறவங்க. நூறு பேர் சேர்ந்துட்டா தலைகீழ் புரியாத ஆடறவனுங்க. ஊர்வலம் போடான்னா கண்ணாடி உடைக்காத போக மாட்டானுங்க. கண்ணாடி உடைச்சா போலீஸ் உதைக்காத விடாது. நாம அடிபட

முடியுமா? லத்தி சார்ஜ் வாங்க முடியுமா? யார் தலைவரு, புடிச்சு உள்ளே போட்டு மிதிப்பான். நம்மால மிதிபட முடியுமா? தலைவரேன்னு இவங்க கூப்பிட்டாலும் போலீஸ் கேட்டா, கௌரவ ஆலோசகர்னு சொல்லிடு வேன். அதே சமயம் நாலு முரட்டுப் பசங்க நம்ம கைல இருந்தா மார்க்கெட்ல நமக்கு ஒரு மரியாதை.

ஓடற ஓட்டத்துல கூலிக்காரன் ரோடு கடை தக்காளிய மிதிச்சிடுவான். இல்லே... வியாபாரம் பேசற பொம்பளைய மூட்டைல இடிச்சு கறிவேப்பிலைக் கூடைய கவுத்துருவான். என்ன ஆவும்... ரோடு கடைக்காரன் ஒரு சொல்லு சொல்ல, மூட்டை தூக்கற கூலிக்காரன் இன்னொரு சொல்லு சொல்ல, சொல்லு மேல சொல்லு போட்டு கத்திக் கப்படால வந்து நிக்கும். கடை போட்ட பெரிய பணக்காரனுக்கு கத்தி, ரத்தம்னா பயம். நம்ம சந்துல சண்டைன்னு போன் போட்டு கூப்புடுவான். ஓடிப்போய் ஒரு அதட்டுப் போட்டம்னா ரெண்டு பக்கமும் ஒதுங்கியிருக்கும்.

இந்தாடி நாயே... என்னாத்த மிதிச்சிட்டான்னு இந்தக் கூச்சல் போடற. இந்தா மிதிச்சதுக்குன்னு பத்து ரூபாவ தூக்கிப் போடுவேன். அதுவே அதிகம். தடதடன்னு சண்டை கீழ் இறங்கிடும்.

எல்லாரும் பொழைக்கற இடம்டா இது. பூமிய பார்த்து காலை வைடா அப்படின்னு கூலிக்காரனைப் பார்த்து திட்டுவேன். அவனும் அடங்கிடுவான். அஞ்சு நிமிஷத்துல சரிபண்ணிடுவேன். நாம் குரல் கொடுத்து அடங்கினது மார்க்கெட்காரன் பார்த்துட்டு அடடா... யாரதுன்னு கேப்பான், அருணாசல முதலியார்னு சொல்லுவ. தெரிஞ்சவன் சொல்லுவான். அப்புறம் அவனாண்டையும் எனக்கு காரியம் ஆவும்.



அறுபத்திமூவருக்கு நடைபாதை வியாபாரிகள் சங்கம் கூழ் ஊத்துச்சு. அவங்க காசு கொடுத்து ஆயிரம் பேரும் கூழ் ஊத்தணும்னா முடியுமா? அவனே கூழ் சாப்பிடறவன். அடுத்தவனுக்குக் கூழ் ஊத்துன்னா முடியுமா? அப்போ தோள்ல துண்டு போட்டுக்கினு கடைகடையா ஏறி இறங்கினேன். சாமி காரியத்துக்கினு காசு கேப்பேன். இவனுங்க போனா பத்து ரூபா கிடைக்கும். நாம போனா நூறு ரூபா கிடைக்கும்.''

''அடிசக்கை... அதுலயும் பேர் பாதி தள்ளிக்குவியா?'' யாரோ கொக்கரித்தார்கள்.

''அட ஆக்கங்கெட்ட கூவை... அதுல போய் கை வைக்கலாமா? நான் கேக்கறதோட சரி, துட்டு கையால வாங்கமாட்டேன். அந்த துட்டை தொட்டம்னா அவனும் சந்தேகப்படுவான். இவனும் சந்தேகப்படுவான்.''

''எவனும்?'' விளக்கம் கேட்டார்கள்.

''நடைபாதை சங்கமும் சந்தேகப்படும். கடைக்காரப் பணக்காரனும் சந்தேகப்படுவான். அதனால அதைத் தொடக்கூடாது. ஆனா வேற ஒண்ணு செய்வேன்.''

''என்னாது?''

அது ரகசியம். சொல்லக்கூடாது.''

''பரவால்ல சொல்லு. நான் கொத்தவால் சாவடிக்கு வரப்போறவன்தானே... பரவால்ல சொல்லு.'' உற்சாகம் கொடுப்பார்கள்.

''நூறு ரூபா நன்கொடை கொடுத்தவனுக்கு நிச்சயமா கூழ் கொடுக்கணும்னு சொல்லுவேன். கூழ் எப்படி கொடுக்கறதுன்னு கேப்பாங்க. கொண்டு போய் அவன் டம்ளர்ல ஊத்தலாம்ன்னு கேப்பானுங்க.''

‘‘அது தப்புடா... மரியாதை இல்லாத விஷயம். நூறு ரூபா துட்டு கொடுத்தவனுக்கு பத்து ரூபா எவர்சில்வர் டம்பளர் கூழ் ஊத்தி மரியாதையா கொண்டுபோய் கொடுக்கணும்னுவேன்.

‘‘ஜாண் உயர டம்பளர் இருநூறு வாங்குவேன். எல்லாத்துலயும் கூழ் ஊத்தி விபூதி பூசி குங்குமம் இட்டு வேப்பிலை கட்டி பெரிய அறுகோண முக்கோணமா அடுக்குவோம். ஐயரைவுட்டு பூஜை பண்ணச் சொல்லு வேன். அப்படியே தட்டுவண்டி சைக்கிள் ரிக்ஷால ஏத்தி கடை கடையா கொண்டு போய்க் கொடுப்பம். மொள்ளமா காதோரம், முடிஞ்சபோது டம்ளரை திருப்பித் தந்துருங்கன்னுவேன். இப்ப என் வூட்ல எழுவத்தி நாலு டம்ளர் இருக்கு கருக்கழியாத... யாருக்குன்னா வேணும்னா சொல்லு... ஒண்ணு எட்டு ரூபான்னு கொடுத்துர்றேன்.’’

‘‘இது சாமிக் குத்தம் இல்லையா.’’ இன்னொரு சிநேகிதன் காரமாகக் கேட்டான்.

‘‘அங்கதான் நீ என்னைப் புரிஞ்சுக்கலை.’’

‘‘என்னா புரிஞ்சுக்கலை.’’

‘‘மெட்ராஸ் ஜனம் அறுபத்திமூவர்தான் கொண்டாடுது. மைலாப்பூர் தேருக்கு மரியாதை பண்றதுல்லை. எனக்கு மைலாப்பூர் தேர் பாக்கறபோது எல்லாம் கள்ளழகர் வைகைல இறங்கறதுதான் ஞாபகம் வரும். அடுத்த வருஷம் தேருக்கு அந்த டேக்ஸா காசை புட்டா மாத்தி பெரம்புக்கூடைல துணி போட்டு எடுத்து தேரிழுக்கற புள்ளைங்களுக்கு எல்லாம் வாரி வாரி கொடுத்துடுவேன். யார் புட்டு கொடுக்கறதுன்னு கேப்பாங்க. கொத்தவால் சாவடி அருணாசல முதலியார்னு



சொல்லுவேன். மைலாப்பூர் மார்க்கெட் எனக்கு மரியாதை பண்ணும். லஸ்ல இருக்கற தண்ணித்துறை மார்க்கெட் கையெடுத்து கும்பிடும். ஊர் கூடுற இடத்துல பெரிய மனுஷனா இருக்கணும்டா.

எழுவது டம்ளர்ன்னே வச்சுக்கலாம். ஒரு டம்ளர் எட்டு ரூபான்னே வச்சுக்க. ஐந்நூத்தி அறுபது ரூபா. ஒரு வருஷத்து வட்டி நாப்பது ரூபா அதையும் சேர்த்தா அறு நூறு ரூபா. போக்குவரத்து செலவு ஒரு நூறு ரூபா. ஐந்நூறு ரூபாய்க்கு எந்தனை கூடை வெல்லப் புட்டு வைக்கலாம்னு நினைக்கறே. பத்துக்கூடை போடலாம்.

ஒரு கூடை புட்டு ஒரு கை வச்சாலும் ஆயிரம் பேர் சாப்பிடலாம். இதவிட என்னா வேணும் எனக்கு?’’

‘‘அதென்னா தேரும்போது புட்டுக் கொடுக்கறது?’’

‘‘புட்டு கொடுத்தா புள்ளைங்க நல்லா இருக்கும்டா, மூணு தலைமுறை இனிப்பா இருக்கும். அதுக்குதான் வெல்லம் உதிர்த்து புட்டு பண்றது.’’

ஆனால், அருணாசல முதலியாரின் பிள்ளைகள் எப்படி இருந்தார்கள் என்று யாரும் கேட்கவில்லை. யாரும் கேட்காத கேள்விக்கு அவர் பதில் சொல்வதில்லை.

அருணாசல முதலியாருக்கு கொத்தவால்சாவடி... வேறு இடம். வீடு வேறு உலகம். வியாபாரி வீட்டைப்பற்றி யோசித்தால் வியாபாரம் பண்ண முடியாதென்று அவர் நம்பினார்.

அவர் வீடு அவருக்கு இரண்டாவது மூன்றாவது நான்காவது பட்சம். வெளி உலகத்தில் உள்ளவர்களே முதல் பட்சம். முதலுக்கும் இரண்டாவதுக்கும் நடுவே வேறு ஒரு

பச்சாதாபம் இருந்தது. அவர் தம்பிகள் மீது அவருக்கு வாஞ்சை இருந்தது. அவர்களை முன்னேறவைக்கும் எண்ணம் இருந்தது,

முதல் தம்பி மதுரையில் இருந்துவந்து அவர் எதிரே கைகட்டி நின்றபோது அவனோடு ஒரு நாள் முழுவதும் அவர் பேசவே இல்லை. மாறாய் அவனுக்கு என்ன உதவி செய்வது என்று யோசித்தார். அவனுக்கு பொறுமை இருக்கிறதா என்று சோதித்தார். அந்த சோதனையில் வெற்றிபெற அவன் கட்டிய கை பிரிக்காமல் இருக்க, அவனுக்கு உதவி செய்ய தீர்மானித்தார். செய்தார்.

## 3

பதினாறு வயதில் எட்டாவது படித்துக்கொண்டிருந்த அருணாசலத்தின் அப்பா மறுபடியும் காணாமல் போனார். வீட்டை கவனிக்க வேண்டிய பொறுப்பு, இரண்டு தம்பிகளையும் ஒரு தங்கையையும் கரை ஏற்ற வேண்டிய பொறுப்பு அவர் தலையில் விழுந்தது.

எங்கேயாவது அருகேதான் போயிருப்பார். வருவார் என்கிற நம்பிக்கை ஒரு வாரத்தில் அறவே சிதைந்தது. சம்சார பந்தத்தில் இன்னும் சிக்கி இருக்க நான் விரும்பவில்லை. எனவே விடை பெறுகிறேன். இனி இது இறைவனுக்காகவே வாழும். இனி இது இறைவனோட இருக்கும். இது இருந்தாலும் இறந்தாலும் ஒன்றே. இதற்கு எந்தக் கடனும் செய்ய வேண்டாம் என்று கையெழுத்திடாது அவர் கையெழுத்தில் ஒரு கடிதம் வந்தது.



அருணாசலத்தை அந்தக் கடிதம் ஆத்திரப்பட வைத்தது. கடன் இல்லை என்பது வாஸ்தவம்தான். ஆனால், நாலு குழந்தைகளும் நாற்பது வயசு மனைவியும் ஒரு ஆடவனுக்கு கடனில்லையா? கடைசிவரை காப்பாற்ற வேண்டிய பொறுப்பில்லையா? அவர்கள் வாழ்ந்து நிமிரும் வரை வசதிகள் தரவேண்டாமா? வழிகாட்ட வேண்டாமா? நாற்பது வயதில் திருமணம் செய்து கொண்டு அம்பத்தெட்டு வயதில் ஓடிப்போய் தான் அதுவாக மாறிவிட்டதாய் கையெழுத்தில்லாத கடிதம் எழுதினால் முடிந்து போயிற்றா. இருபது வயதில் அம்மாவை விட்டு எங்கெங்கோ திரிந்து நாற்பது வயதில் ஊருக்கு வந்திருக்கக்கூடாது. வந்திருந்தாலும் திருமண வாழ்வில் ஈடுபட்டிருக்கக் கூடாது. ஈடுபட்டிருந்தாலும் நாலு குழந்தைகள் பெற்றிருக்கக் கூடாது. திருமணம் என்பது ஒரு கடன். மனைவியின் மரண பரியந்தமும் உள்ள கடன். பிள்ளைகள் என்பது தகப்பன் மரணம் வரையில் கடன். எனக்கு கடன் செய்யாதே என்றால் கம்பீரம் வந்து விடுமா? கடமையை முடித்தவனுக்குத்தான் கடன்படத் தோன்றும். நீத்தார்கடன் செய்யத் தோன்றும். கடனே என்று வாழ்தவனுக்கு எவன் நீத்தார்கடன் செய்வான்? அருணாசலம் கடிதம் படித்தவுடனேயே கடன் செய்ய ஆசைப்பட்டான். கிணற்றடிக்கு போய் மொண்டு மொண்டு குளித்தான்.

''எங்கப்பன் செத்துட்டான். அவனுக்கு குளிச்சு தலை முழுகிட்டேன். இனிமே நான் இருக்கேம்மா... கவலைப் படாத. எதுனா செய்து உன்னையும், என் தம்பிகளையும் நான் காப்பாத்துறேன்.'' பள்ளிக்கூட புத்தகத்தை பாதி விலைக்கு விற்றான். பஸ் ஏறி மதுரைக்கு வந்தான்.

மதுரைக்கும் அவன் ஊருக்கும் பதினாறு மைல் தூரம். ஊரிலிருந்து வரும்போது ஆளிடம் காசு கொடுத்தனுப்பினால் போதும். வீட்டுக்கு போய்விடும்.

பதினேழு வயதுப் பையன் மதுரையில் எல்லா வேலைகளும் செய்தான். பல்வேறு கூலி வேலைகளைத் தாண்டி ஊரிலிருந்து காய்கறி கொண்டு வருபவர்களுக்கு சரியான வியாபாரியைக் காட்டினான். சரியான வியாபாரிகளுக்கு திறமையான விவசாயிகளை அறிமுகப் படுத்தினான். முன்பணம் வாங்கிக் கொடுத்தான். மல்லிகை தோட்டக்காரர்களை அறிமுகப் படுத்தினான். மல்லிகை தோட்டக்காரர்களுக்கு சென்னை ஆட்கள் வந்திருக்கும் விவரம் சொன்னான். எல்லா உதவியும் காசாயிற்று. காசு அதிகம் கொடுக்கிறவர்களுக்கு உதவி அதிகம் செய்யும் எண்ணம் வந்தது.

ஆனால், எத்தனை கரணம் போட்டாலும் மதுரையில் ஓரளவுக்கு மேல் முன்னேற முடியாது என்று தெரிந்து போயிற்று. சென்னைக்கு குடிபெயரும் யோசனையை அம்மாவிடம் சொன்னான். அம்மா பயந்தாள். தம்பிகள் குதூகலப்பட்டார்கள். தங்கை புரியாமல் விழித்தாள். 'உறவுகள், கெட்ட பய ஊரு அது. அங்க போவாத' என்று பயமுறுத்தினார்கள்.

ஆனால், இருபது வயசுக்குள் எல்லாவித கொடுமைகளையும் மதுரை அவனுக்கு கற்றுக் கொடுத்திருந்தது. இதைவிட மோசமாக சென்னை இருக்காது என்று தோன்றியது.

''எங்க சொல் பேச்சு மீறி போற... பொட்டைப் புள்ளையோட. மறுபடி திரும்பி வந்தா... ஊருக்குள்ள



சேர்க்கமாட்டோம். உன்னை யாருன்னே தெரியாதுன்னு சொல்லிடுவோம்.'' உறவுகள் எச்சரித்தன.

மறுபடியும் அந்த எச்சரிக்கைதான் அவனை ஆவேசப் படுத்தியது. ஆழ்ந்து யோசனை செய்து பார்த்ததில் சென்னையில் குடியேறி முன்னேறிவிடுவானோ என்கிற பயம் உறவின் அடி மனசில் இருப்பது புரிந்தது. ஒருமுறை ஒட்டுக் கேட்கும்போது உறுதியாயிற்று.

''துடிப்பான பய... கொஞ்சம் தட்டி வச்சாதான் நமக்கு தாங்கற மாதிரி இருப்பான். நம்மாள் ஒருத்தன் மதுரை மார்க்கெட்ல இருக்கறது வசதில்லா...?'' கெக்கெலிப்போடு பேசுவது கேட்க முடிந்தது... வருத்தமும் கோபமும் நெஞ்சை அரித்தன.

''இல்ல மாமா... நான் மெட்ராஸ் போகணும்னு முடிவு பண்ணிட்டேன்'' என்று அவரிடம் எதிரே நின்ற போது துண்டை தன் வாயில் பொத்தி அவர் விக்கி விக்கி அழுத நாடகம் வியப்பாய் இருந்தது.

அப்போது பதினாறு வயதான தம்பி சிவசண்முகமும் ஆச்சரியப்பட்டான்.

''அண்ணே... எப்படி அழுவுறார் பார்த்தீங்களா, நீங்க பதில் பேசாத வூட்டுக்குப் போயிடுங்க. நான் இங்கே கோலி ஆடற மாதிரி இருந்த இவரு என்ன பேசறாருன்னு கேட்டுட்டு வரேன்.''

அவன் தலை மறைந்ததும் அழுத மாமன் துண்டு உதறி, ''செத்த பய மவன்... சொல் பேச்சு கேக்கமாட்டேங்கறானே... சரி, சாவட்டும் வுடு. ஏண்டி, அந்த பொட்டப் புள்ளையவாச்சும் எதாச்சும் சொல்லி நம்மளோட

நிறுத்திக்கடி. வீட்டு வேலைக்கு ஆவும் என்று தங்கையைப் பிரிக்க வைக்கிற சூழ்ச்சி தம்பியின் மூலமாக எட்டியது.

''என் வீட்டு நாய்க்குட்டியைக்கூட உன்னிடம் நான் கொடுக்க மாட்டேன்'' என்று வீறாப்போடு சென்னைக்கு அருணாசலம் இருபது வயதில் கிளம்பினான்.

''எலோய்... நீ போய் இறங்கறப்ப இவ பெரிசாயிடு வாடா. ஆளான பொண்ணை அந்த ஊரு இந்த ஊருன்னு கூட்டிட்டுப் போயிட்டு இந்த ஊருல பொண்ணு குடுக்க வந்த... ஏகப்பட்ட கேள்வி வரும். பட்டணத்துப் பொண்ணான்னு நம்ம ஊரு பையன் பயப்படுவான். சிரிச்சுப் பேசினா கேள்வி கேக்கற ஊருடா இது. சேர்ந்து ஒரு வண்டில போனா சந்தேகப்படற ஊரு இது. உன் தங்கச்சிக்கு இது நல்லதில்ல. என்னான்ட இத வுட்டுட்டுப் போ. நானே வளர்த்து ஆளாக்கி கண்ணாலம் கட்டி வைக்கிறேன்.''

''யாருக்கு?'' அருணாசலம் திருப்பி கேட்டான்.

''என்ன கேள்விடா இது? இந்த ஊர்ல ஆம்பளைக்கா பஞ்சம்? சூராதி சூரன்க இருக்கற ஊருடா இது. இவ அழகுக்கு மாடு மடக்கற பயலுக நான் நீன்னு போட்டி போட்டுட்டு வருவானுங்க.''

''என் தங்கச்சிக்கு மாட்டுப் பயலுக வேணாம். நல்ல மனுஷனா கிடைச்சா போதும்.''

''மதுரைல இருக்கறவன் மனுஷனா தெரியலையா உனக்கு? மாடு புடிக்கறவன் கேவலமாயிட்டானா உனக்கு? உங்கப்பன் திமிரு உன்னை விட்டுப் போகலையே. எவனாவது ஆண்டியா பார்த்து குடுப்பியா.''



''நீங்க அப்படித்தான் உங்கக்காளைக் குடுத்தீங்க. எங்கப்பன் ஆண்டின்னு தெரிஞ்சுதானே அவசர அவசரமா கட்டி வச்சீங்க.'

''தப்பு நடந்து போச்சுடா.''

''அந்த தப்பை நான் பண்ணமாட்டேன்.''

இருபது வயது சிங்கம் எதிர்த்து நின்றது.

''நம்ம உறவுப் பொண்ணு ஊர் விட்டு ஊரு போவக் கூடாது. விடு அவளை. 'தங்கையைக் கைபிடித்து இழுக்க, அந்தச் சிறு பெண் உதறி அண்ணனோடு ஒட்டிக் கொண்டாள். இரண்டு தம்பிகளும் அவளை அரணாய் சுற்றிக் கொண்டார்கள்.

''அடி மூதேவி... நீயுமா இந்த அநியாயத்துக்கு உடன்படுறே...'' அம்மாவைநோக்கி கை ஓங்கினார்கள்.

''என் புள்ளை உன்னைவிட விவரமானவன். அவங்கப்பன் போனபிறகு யார்கிட்டயும் கை ஏந்தாம ஒருத்தனா நின்னு சோறு போட்டவன். அவனுக்கு நல்லது கெட்டது தெரியும்.''

அம்மா திடமாய் மறுத்துவிட்டாள்.

''அப்ப நாளைக்கு நல்லது கெட்டதுக்கு வான்னு கூப்பிடலைன்னு வந்து பஞ்சாயத்துல நின்னாக்கா எனக்கில்ல அவமானம். பஞ்சாயத்துல வந்து, நின்னு ஊருக்கு தலைமுழுகிட்டேன்னு சொல்லிட்டுப் போ.''

''மயிர் பஞ்சாயத்து.'' புகை வண்டி வர, அருணாசலம் வண்டி ஏறினான். டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்தான். அவனுடைய அதிர்ஷ்டம் வண்டி கிளம்பின

உடனே சங்கிலி இழுத்து நிறுத்தப்பட்டது. திகைத்துப் போனான்.

''இந்த அஞ்சு பேரும் டிக்கெட் இல்லாம போறாக சாரேய்... கூடைல நாய்க்குட்டி வேற வச்சுருக்காக. கூப்புட்டு செவுட்ல அறைவுட்டு ஊரை நாட்டை பாக்கப் போகச் சொல்லுங்க.''

அம்மாவின் எதிரில், தம்பியின் எதிரில், தங்கையின் எதிரில் ப்ளார் ப்ளார் என்று கன்னத்தில் அறை விழுந்தது. அவனில்லாமல் வண்டி கிளம்பிப் போயிற்று.

உறவே வண்டியைச் சங்கிலி பிடித்து இழுத்து காட்டி கொடுத்த காரியம் வன்மமாய் மனசைத் தீய்த்தது. உன் கண்ணெதிரிலே வாழ்ந்து காட்டுகிறேன் பார் என்கிற சூளுரை உள்ளே நெஞ்சில் எழுந்தது. அவன் சூளுரையை வெளியே சொல்லவில்லை. தண்டவாளத்தோடு நடந்தான். தம்பிகள் பின்தொடர அம்மா தளர்ந்து வர, தங்கையைத் தோளில் தூக்கிக் கொண்டு நடந்தான். அடுத்த ஸ்டேஷனில் படியேறினான். அம்மா அவன் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

''இவங்ககிட்ட நம்ம குழந்தையைக் கொடுத்துட்டுப் போலாமா?''

''கூடாது. என்ன பாடு பட்டாலும் பட்டணம் போயிடலாம். இப்ப வந்த வழி முழுக்க நான் மீனாட்சி தாயை, பெரிய கருப்பு தேவரை வேண்டிக்கிட்டுதான் வந்தேன். நாம பட்டணம் போறோம். எந்தக் கவலையும் இல்லாம பட்டணம் போறோம்.''



மதுரையை விட்டு அடுத்த ஸ்டேஷனையும் விட்டு அதற்கு அடுத்த ஸ்டேஷனையும் தாண்டிப் போய் கொண்டிருந்த ரயில் திரும்பி பின்னோக்கி வந்து கொண்டிருந்தது. இரண்டு ஸ்டேஷன் தாண்டி ஏதோ எதிர்ப்பக்கம் வந்த கூட்ஸ் வண்டி தண்டவாளத்தில் படுத்துக்கிடக்கிறதாம். படுத்த கூட்ஸ் வண்டியை நிமிர்த்தி, தண்டவாளத்தைப் பழுது பார்த்த பிறகுதான் போக முடியுமாம். மதுரையில் நிற்கவசதியில்லாததால் ஏற்கெனவே சில வண்டிகள் நின்று கொண்டிருப்பதால் இந்த வண்டி இங்கேயே நிற்கும். சென்னைக்கு கிளம்ப குறைந்தபட்சம் ஆறு மணி நேரமாகும். அதிகபட்சம் இரண்டு நாட்களாகும். நிதானமாய் போக விரும்புபவர் போய்க் கொள்ளலாம். அல்லது பணத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டு சௌகரியப்படி போய்ச் சேரலாம். இடைவிடாத அறிவிப்பு கேட்டது.

எல்லோரும் இறங்கிய வண்டியில் இவர்கள் ஏறிக் கொண்டார்கள். வழிக்கு வைத்திருந்த உணவை அவிழ்த்து சாப்பிட்டார்கள். நாய்க்குட்டிக்கும் போட்டார்கள். வண்டி எட்டு மணி நேர தாமதம், எவருமில்லாத ரயில் தொடர். கையில் இருந்த காசில் இருந்து பழங்களும், பிஸ்கட்டுகளும் வாங்கிக் கொள்ள... இடது கையில் பிஸ்கட்டும், வலது கையில் வாழைப்பழமுமாக தம்பியும் பாண்டி ஆடினார்கள். யாரும் டிக்கெட் கேட்கவில்லை. உச்சி வெயிலில் சென்னை அடைந்தபோது அம்மா மிகவும் தெம்போடு பிள்ளையின் கையைப் பற்றிக் கொண்டாள்.

''இப்படி ஒரு பிரயாணம் இந்த ஜென்மத்துல செய்திருப்போமா. ஆளுக்கு ஒரு பெஞ்ச்சுல படுத்துட்டு வந்தமே... இப்படி ஒரு சௌகரியம் யாருக்கு கிடைக்கும். நீ

நல்லா இருப்ப அருணாசலம். ஓஹோன்னு வரப்போற... உன் தம்பி தங்கைய மறந்துராதப்பா. உன் முதுகு பின்னால் ஒண்டிக்கிட்டு ஊரைப் பகைச்சுக்கிட்டு வந்த பசங்க அதுங்க, அதுகளை நல்லா வச்சுக்க வேண்டியது உன் கடமை.''

''அண்ணே, நானும் படிப்பு வுட்டுர்ரேண்ணே! எனக்கு எதுனா வேலை வாங்கிக் குடுங்கண்ணே.'' தம்பி கைகட்டி பேசினான்.

''இல்லடா, நீ படிக்கணும்; எப்பாடுபட்டாவது படிக்கணும். பட்டணம் போய் நாம கெட்டுரலைங்கறதுக்கு உம் படிப்பு முதசாட்சியா இருக்கணும், எது படிச்சா பெரிய ஆளாவறதுன்னு நீயே தீர்மானம் பண்ணு. நான் படிக்க வைக்கிறேன்.'' பத்தாவது பாஸ் செய்தவன் டிப்ளமா இன் எலக்ட்ரிகல் படிப்பில் சேர்ந்தான். மிகவும் பின்தங்கிய வகுப்பு என்று அத்தாட்சி பத்திரம் வாங்கிக் கொண்டான். படிப்பு உதவிக்கு பரீட்சை எழுதினால் பணம் தருவார்கள் என்று கேள்விப்பட்டு பரீட்சை எழுதினான். உதவி கிடைத்தது.

''காலேஜ் காஞ்சிபுரத்துல இருக்கு, நாம மெட்ராஸ்ல இருக்கோம். எப்படி படிக்கிறது?''

''எலேய்... போய் அங்கனயே தங்கி படிறா.''

அண்ணன் கட்டளையிட, தகரப் பெட்டியோடு தம்பி காஞ்சிபுரம் போனான். மார்க்கெட்டில் வேலை செய்தவனுக்கு மார்க்கெட்தான் காலூன்றக்கூடிய இடம், மதுரை மார்க்கெட்டை விட சென்னை மூன்று பங்கு பெரிசு. பத்து மடங்கு உயரம். பணப்புழக்கம் பெரிய அளவில் இருந்தது. ஆனால், மனிதர்கள் பத்து பைசாவுக்கும்



நம்பிக்கை இல்லாதிருந்தார்கள். எத்தனை வாஞ்சையோடு பார்த்தாலும் சந்தேகத்தோடு பார்த்தார்கள்.

''லட்ச ரூவா வேணுமா தரேன். என்னா வச்சிருக்க சொல்லு, எத நம்பி தர்றதுன்னு சொல்லு.''

''காசு வேணாம் முதலாளி. உங்க அன்பு இருந்தா போதும். ரெண்டு வேளை சோறு போட்டு கூலி ஆளா வச்சிருந்தா போதும்.''

கூலிக்கு நம்பிக்கையான ஆள் கிடைப்பது கஷ்டமாக இருந்தது. மூட்டை தூக்கியவர் வீட்டுக்குப் போய் முதலாளியின் கட்டுச்சோறு எடுத்து வந்தான். வீட்டில் பழக்கம் ஏற்பட்டதால், ஆடமுடியாது கிடந்த ஊஞ்சலை, ஓட முடியாத சைக்கிளை அவர் மகனுக்கு சரிபண்ணி கொடுத்தான்.

முதலாளியின் அப்பாவுக்கு அறுவதுக்கு அறுவது வந்தது. அன்று வந்த அத்தனை பேருக்கும் பழக்கமானான். அங்கே முக்கியமானான்.

''போய் அப்பாகிட்ட நான் கேட்டேன்னு அறுபதாயிரம் வாங்கிட்டு வா.'' அவனை அனுப்பி வீட்டுக்கு போன் போட்டுவிட்டு நகம் கடித்துவிட்டு முதலாளி காத்திருக்க, இடதுகையில் சாப்பாடும், வலது கையில் காசுபொட்டலமுமாய் வந்து சேர்ந்தான்.

''முதலாளி. கேரியர்ல என்ன சாப்பாடு இருக்கும்னு தெரியும். பொட்டலத்துல எத்தினி காசு இருக்குன்னு தெரியாது. எண்ணிப்பாத்துக்கங்க. அப்புறம் அந்தால போறேன்.'' அவர் எண்ணிப் பார்த்த பிறகே கம்பீரமாய் நகர்ந்து போனான்.

கடை சாவி கைக்கு வந்தது.

கல்லா சாவி கைக்கு வந்தது.

மணி அரிசி வெளியே போகவில்லை. ஒரு பைசாகாக குறையவில்லை. ரெண்டு வருஷத்துக்குள் பெரிய நம்பிக் கையை சம்பாதிக்க கடுமையாய் உழைத்தான்.

தங்கை பெரியவளானாள் என்ற செய்தியை சொல்ல அம்மா கடை வாசலுக்கு வந்திருந்தபோது அவன் லாரி கவிழ்ந்து அரிசி தெருவில் கிடக்கிறது என்கிற செய்தியின் காரணமாய் எங்கோ வெகு தொலைவுக்கு பயணப் பட்டிருந்தான்.

‘‘சடங்கு செய்யணுமே, என் புள்ளை இல்லையே.’’ அம்மா கை பிசைந்தாள்.

‘‘அவன் இல்லாட்டி என்னா... நான் இருக்கே னில்ல... உங்க பொண்ணு நம்ம வூட்டுப் பொண்ணுல்ல...’’ முதலாளிக்கு நன்றி காட்ட சந்தர்ப்பம் வந்தது.

குடிசையிலிருந்த பெண்ணின் பூப்பு சடங்கு பெரிய விருந்தாய் மாறிற்று,

‘‘என்னடா... குடிசைலயா இருக்க நீ... சொல்லவே யில்லையே... வயசுக்கு வந்த பொண்ணை வச்சுக்கிட்டு அந்த மாதிரி ஏரியாவுல இருக்கக்கூடாது. கடை மாடில கணக்கு புஸ்தகம் வச்சிருக்குல்ல... அந்த இடம் ஓடுபிரிச்சு மாத்தி தர்றேன். அங்க இருந்துக்க. திறந்தவெளில ஆஸ்பெஸ்டாஸ் போட்டுக்க...’’

ஆஸ்பெஸ்டாஸும் ஓட்டுக் கூரையுமான இடத்தில் குடிபுகுந்தார்கள். குடிபுகுந்தபோதுதான் தெரிந்தது. அந்த



இடம் முதலாளிக்கு சொந்தமில்லை. கோயிலுக்குச் சொந்தமானது என்று. மாதம் எட்டேகால் ரூபாய் வாடகை என்பது தெரிந்தது. மார்கழி மாசம் ஒரு நாள் உபயம் அவருடையது என்பதாய் கட்டளை இருந்தது. கோயில் அவனுக்கு இருபது ரூபாய் வாடகை கேட்டது. ஒரு வருடத்திற்கு ஒருதவலை தயிர்சாதம் நிவேதனம் செய்யச் சொல்லிற்று. அவன் சந்தோஷமாய் நிபந்தனைகளை ஏற்றான்.

அவன் குடியேறிய அடுத்த வருடமே கொத்தவால் சாவடி மார்க்கெட்டில் வட இந்திய பனியாக்கள் புகுந்தார்கள். தங்க மார்க்கெட் தகராறாக அரிசி, பருப்பு, மிளகாய், பால்பவுடர் என்று புகுந்தார்கள். கொத்தவால் சாவடி ஆறு மடங்கு அகலமாயிற்று. மதுரையைவிட நூறு மடங்கு பணப்புழக்கத்தில் உயர்ந்தது. கோல் உயர குடி உயரும், ஊர் உயர அவனும் உயர்ந்தான். அவனும் வியாபாரி ஆனான்.

## 4

உழைப்பவனை உலகம் உதாசீனப்படுத்தியதே யில்லை. அவனை உயர வைக்க தவறியதே இல்லை.

‘‘நானுந்தான் உழைக்கறேன், எங்க உயர முடியது...’’ நாலு நாள் உழைத்துவிட்டு ஐந்தாம் நாள் பலன் எதிர்ப் பார்ப்பவர்களுக்கு இது புரியாது. பலனை எதிர்பார்க்காதே என்கிற சூட்சுமம் பலருக்கு புரிவதேயில்லை.

ஆறு நாள் கஷ்டப்பட்டு உழைத்தால் ஆறாயிரம் கைமேல் கிடைக்கும் என்பதாய் வைத்துக் கொள்வோம்,

பாதி பேருக்கு ஆறாயிரம் கையில் கிடைத்தவுடன் உழைக்கத் தோன்றாது. உல்லாசம் தோன்றும். கைல காசு இருக்கறபோது கஷ்டப்படுவானேன் என்று தோன்றும். வீசி செலவு செய்யத் தோன்றும். அப்படி செலவு செய்ததில் வேதனை தோன்றும், செலவு செய்வதில் இரண்டு நாள் செலவு செய்துவிட்ட உல்லாசக் களைப்பில் செலவு செய்து விட்டோமோ என்கிற கவலையில் இரண்டு நாள், என்று ஆறு நாள் பொறுத்து இன்னொரு ஆறு நாள் கடுமையாய் உழைக்கப் போக, ஓய்வு கொடுத்த சுகம் உழைக்க இடம் தராது. ஓய்வாக உழைக்க முடியாதா என்கிற ஏக்கம்தான் வரும். உட்கார்ந்தபடிக்கு வேலை செய்ய முடியாதா என்கிற எண்ணம் வரும். பலனை எதிர்பார்த்ததால் வந்த பாபம் இது.

உழைப்பு என்பது இடைவிடாத பயிற்சி என்று புரியாதவர்கள் செயலிது. அது ஒரு யோக சாதனை. யோகப் பயிற்சியின் நடுவே நிறத்தலாகாது என்று அறியாதவர்களின் வேதனை இது. இடைவிடாது உழைக்கிறவர்களுக்கு ஓய்வு சிறிதளவு போதும். நீண்ட ஓய்வு பயம் தரும். வருடத்தில் இரண்டு நாள் சும்மா இருந்தால்கூட உழைக்கும் வாய்ப்புகள் நழுவிவிட்டனவோ என்று கவலை வரும். உழைப்பு போதையாக இருப்பவனுக்கு உல்லாசம் குமட்டல் எடுக்கும். உழைப்பின் பலன் ஓய்வு என்பதை மனம் ஏற்க மறுக்கும்.

ஆனால் உழைப்புக்கு பலன் உண்டு. அது யாருக்கு? அது தனக்கல்ல, தன் குடும்பத்துக்கு என்று அருணாசலம் தீர்மானித்தான். அரிசி பிடிக்க காஞ்சிபுரம் போனபோது அவனாகவே பாலிடெக்னிக்கில் நுழைந்து தம்பி எங்கே



என்று தேடினான். முப்பத்தைந்து பேர் உள்ள வகுப்பில் தம்பி மோட்டாரைப் பிரித்து எண்ணெய் கையும், முகத்து வியர்வையுமாய் இருப்பது பார்த்து சந்தோஷப்பட்டான். எப்படீங்க படிக்கிறான் என்று கேட்டதற்கு, நல்ல பதில் வர, சந்தோஷப்பட்டான். இருபது ரூபாய் கொடுத்துவிட்டு வந்தான். பெரிய தம்பியைப் பற்றி சிறிய தம்பியிடம் பெருமையாகப் பேசினான். அவனையும் நன்றாகப் படிக்க வற்புறுத்தினான். தங்கைக்கு வேறு விதமான படிப்பை அறிவுறுத்தினான்.

''பத்தாவது படிக்கணும்கற. படி, வேணாம்னு சொல்லலை. படிச்சு பாஸ் பண்ணி வேலைக்கு போவேன்னு துடிக்காத. உன் வேலை வீட்டு வேலைதான். அதை பரபரன்னு செய். நாலு விதமா ஆக்கிப்போட கத்துக்க. கோலமோ தையலோ தெரிஞ்சுக்க. நம்ம தங்கச்சி அது சம்பாதிச்சு நிக்கற அளவுக்கு படிப்பு வேணாமான்னு கேக்கறான் பெரிய தம்பி. வேணாம்னு சொல்றேன். உன்னைய காப்பாத்தறவனாப் பாத்து உன்னைய கட்டிக் குடுக்கறேன். அப்படி அவன் காப்பாத்தலைன்னா உன்னை நான் காப்பாத்தறேன். நீ வீட்டைக் காப்பாத்து போதும். சுமாரா படிச்சா போதும்.''

அவன் தங்கை அவனைப் புரிந்துகொண்டு அப்படியே வளர்ந்தாள். நீர்ப்பாயுமிடத்து முருங்கைமரம் போல தளதளப்புடன் வளர்ந்தாள். பனியாக்கள் வியாபாரத்தில் புக, அவர்கள் காசு எதிரே பழைய முதலாளிகள் பின்வாங்கினார்கள். அருணாசலம் வேலை செய்யும் அரிசிக் கடை முதலாளியின் அடுத்த தலைமுறை, டாக்டர், இன்ஜினீயர் என்று வேறு தொழிலுக்கு திரும்பியது. கடையை பொறுப்பில்லாத கடைசி மகன் எடுத்துக்

கொண்டான். அவன் உட்கார்ந்த பிறகு ஒரு மாசம் அவனுக்கும் அருணாசலத்துக்கும் சரிவரவில்லை.

''யோவ் அருணாசலம், இங்க வாய்யா'' என்று இருபது வயதுப் பையன் இருபத்தெட்டு வயசு அருணாசலத்தை கூப்பிடுவது பிடிக்கவில்லை. இனியும் கூலியாளாய் இருக்க அருணாசலத்துக்கும் விருப்பமில்லை.

''எட்டு வருஷம் உழைச்சுட்டேங்க. என்னை வுட்ருங்க.'' அருணாசலம் முதலாளிடம் கை கூப்பினான்.

''உன்னைய நம்பிதான் பையனைக் கடைல விட்டேன்.''

''உங்க பையன் என்னை நம்பலீங்க. வெள்ளைச் சட்டை போட்ட ஆளைத்தான் நம்பறாரு. நான் நகந்துரலாம்னு நினைக்கிறேன்.''

''வேறெங்க வேலைக்குப் போகப் போற...''

''உங்க மாதிரி முதலாளிகிட்ட வேலை செய்துட்டு வேறெங்கயும் வேலை செய்யறது கஷ்டம். நான் கமிஷன் ஏஜெண்டா இருக்கப்போறேங்க. ஐயா, அஞ்சு பத்து எப்பனா கேட்டா உதவி செஞ்சிங்கன்னா போதும்.''

''இப்ப எவ்வளவு வேணும்?''

''உங்க பிரியம் என்னவோ அதைக் குடுங்க.''

பத்தாயிரம் ரூபாய் காசு கொடுத்தார். அப்போது அது பெரிய தொகை. பெரிய உதவி. கொத்தவால் சாவடிக்குள் நுழையும் லாரியை சரக்கு என்ன என்று கேட்டு மேலோட்டமாய் பார்த்து நம்பி காசு கொடுத்து, தார்பாலின் அவிழ்த்து, வாய்க்கு தோன்றிய விலையை முதலில் சொல்லி சரக்கு



அதிகம் இறங்கினால் குறைத்து இறங்காது போனால் அதிகமாக்கி, சூதாட்டமாய் பல பொருள்கள் வியாபாரம் செய்தான். சூது அருணாசலத்தை உயர்த்தியது.

ஐந்தாயிரத்துக்கு விற்ற மாம்பழம் பன்னிரண்டாயிரம் போயிற்று. பத்தாயிரத்துக்கு விற்ற கரும்பு இருபதாயிரம் காட்டிற்று. சில சமயம் ஆயிரம் லாபம் வரும். சில சமயம் ஐந்நூறு துண்டு விழும். ஆனால், எதுவாயினும் விடியற்காலை நாலிலிருந்து வெயில் உறைக்கிற ஒன்பது மணிக்குள் தெரிந்துவிடும். இதற்கு கடை வேண்டாம். காசு இருந்தால்போதும். ஆனால், வட இந்திய பனியாவுக்கு இந்த சூது முதலில் பயமாக இருந்தது. ஆனால், உற்றுப் பார்த்து விஷயம் கற்றுக்கொண்டார்கள். அந்த சிஸ்டமே தப்பு என்றார்கள். லாரி வரும் இடங்கள் பார்த்து பெரிய கோடவுன்கள் பிடித்தார்கள். பெரிய கோடவுன்கள் பிடிக்க காசு இறைத்தார்கள். எத்தனை பகடி கேட்டாலும் எடுத்து வீசினார்கள்.

லாரியில் இருப்பதை, லாரியில் இருந்த வண்ணமே விலை பேச முடியாது. எங்களுக்கு சரக்கு சுத்தம் முக்கியம். இறக்கி சரக்கை தரம் பிரிப்போம். பிறகு விலை பேசுவோம் என்றார்கள். தரமுள்ளவைகளுக்கு ஒரு விலை, தரமில்லாதவைகளுக்கு ஒரு விலை என்று நிர்ணயிக்கப் பட்டது.

சூதாட்டமாக இருந்த வியாபாரம் ஒரு நடை முறைக்கு வந்தது. நல்ல தரத்திற்கு நல்ல விலை தரப் பட்டது. சில சமயம் மூன்று நான்கு வகையாகக் கூறப் பட்டது. கூட்டிப் பார்க்கையில் இது லாபமாகவும் இருந்தது. நல்ல தரம் உயர் விலை. சுமாரான தரம் சுமாரான விலை.

மற்றவை வாய்க்கு வந்த விலை, இறக்கி ஏலம் போலவும் போட ஒரு குறிப்பிட்ட பகுதியை பனியா எடுத்துக் கொண்டு ஒரு குறிப்பிட்ட பகுதியை லாரி வியாபாரிக்கு தந்தான். அப்படி விலை கேட்க ஆளில்லை எனில் ஏலம் நிறுத்தப்பட்டது. இரண்டு நாள் சரக்கை வைத்திருக்க பனியாவால் முடிந்தது. இரண்டு நாள் வைத்து வீணாவதும் உண்டு. விலை எகிறி எகிறி உயர்வதும் உண்டு.

இதெல்லாம் செய்ய பனியாவால்தான் முடியும். பத்தாயிரத்துக்கு பழம் வாங்கி அழிந்து போக ஆயிரம் ரூபாய்க்கு விற்க அவனால்தான் முடியும். ஆயிரம் ரூபாய்க்கு வாங்கியவன் நூறு பத்து ரூபாய் என்று கூவ, நடைபாதை ஆட்கள் வாங்கிக் கொண்டு போனார்கள்.

சென்னையில் நாலணாவுக்கு இரண்டு பங்கனப்பள்ளி விற்ற காலம்அது. அதே மாதிரி காலிஃப்ளவரும் சிரிப்பாய் சிரித்தது. தக்காளியை சௌகார்பேட்டை மாடு தின்றது. அழுகின முட்டைக்கோஸை உரித்து உரித்து வெல்ல உருண்டை சைஸுக்கு விற்றார்கள். வியாபாரம் அதே சூதாட்டம்தான். சூதாட்டத்தில் பனியாக்களால் நியதிகள் ஏற்பட்டன.

அரிசிக்கடை முதலாளியை ஆயிரம் ரூபாய் கடன் கேட்கலாம். அவசரம் என்று பொய் சொல்லி கடன் வாங்கலாம். அம்மாவுக்கு உடம்பு முடியலை. ஆஸ்பத்திரில சேர்த்திருக்கேன் என்று பொய் சொல்லி காசு வாங்கலாம். அப்படி சொல்லி வாங்கிப் போயிருக்கிறார்கள் சிலர். திருப்பி தந்திருக்கிறார்கள் சிலர். இல்ல போ, என்ன பண்றது என்று அழ வைத்திருக்கிறார்கள். ஆனால் பனியா வந்தபிறகு அழுது கடன் வாங்குவது முடியாது போயிற்று.



''உங்கம்மா செத்தா எனக்கு என்னா, எங்கம்மாவும் செத்துப் போச்சு, அஞ்சு வருஷம் முன்னாடி. இந்தா அஞ்சு ரூபா'' என்று பேசுவானே தவிர கடன் தரமாட்டான்.

வசூலிக்க முடியாத கடன் என்பதை பனியா ஏற்றுக் கொள்வதில்லை. அது தனக்கு இழைக்கப்பட்ட அவமானம் என்று கருதினான். அவனுக்கு பாதுகாப்பு வேண்டும். ஸ்தாவர, சங்கம சொத்துக்களின் பேரில் எவ்வளவு வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் கடன் தரத் தயாராக இருந்தான்.

''அடகு வை... அடகு வைன்னா எங்கிட்ட எம் பொண்டாட்டி தாலிதான் இருக்கு அடகு வைக்கறதுக்கு''

''இஷ்டமிருந்தா கொண்டாந்து வை. எடை போட்டு துட்டு தரேன். உனக்கு அது தாலி. எனக்கு அது தங்கம்.''

பனியாவை அயோக்கியன் என்று முறைத்து பார்த்தார்கள். இரக்கமில்லாதவன் என்று ஏசிப்பார்த்தார்கள். ஹிந்தி ஒழிக என்று ஊர் கூவியபோது அடித்துப் பார்த்தார்கள். பனியா கடைசிவரை பனியாவாகவே இருந்தான் – ராஜஸ்தான், மஹாராஷ்டிரா, குஜராத்தி வணிகர்கள் காசே தெய்வம் என்று இருந்தார்கள். காசில்லாதவனை பீடை என்றார்கள்.

சௌகார்பேட்டையில் பனியாக்களால் காசுக்குப் பேயாய் பறப்பது பரவியது. அருணாசலத்தை அது சுலபமாய் பற்றிக்கொண்டது.

''நீ ஏன் என்னாண்ட உக்காந்து பேசற அருணாசலம்.'' ஒரு பனியா இரவு நேரம் பால் குடிக்கும்போது கேட்டான்.

''நீங்க நல்லவரு. அதான்.''

''பொய். எங்கிட்ட துட்டு இருக்கு. அதனால் பேசு.''

''எனக்கு இதை ஒத்துக்க முடியலை சேட்டு. நீங்க நம்புங்க. என்னை அத்தனை மட்டமா நினைக்கறீங்க. சாராயம் காச்சறவன், பொம்பளை வியாபாரம் பண்றவன் கிட்டல்லாம் கூடதான் துட்டு இருக்கு. அங்க போய் உக்கார முடியுங்களா?''

''இப்ப சொன்னியே... இது பேச்சு. நான் வெறும் நல்லவன் இல்லை. துட்டு மட்டும் கொண்ட பொறுக்கி இல்லை. நான் துட்டு கொண்ட நல்லவன். அதனால்தான் பேசறேன்.''

''அப்ப எனக்கு ஒரு கேள்வி வருதுங்க.''

''கேள்!'' சேட் பால் கப்பை கீழே வைத்துவிட்டு தொடை தட்டினான்.

''நீங்க துட்டு கொண்ட நல்லவரு. ஒத்துக்கறேன். ஆனா என்னாண்ட துட்டு இல்லியே. நான் நல்ல மாதிரியா பழகறேன்னுதானே எனக்கு பால் வாங்கிக் குடுத்து பேசறீங்க.''

''தப்பு, நீ நல்லவன் மட்டும் இல்ல. நிறைய துட்டு சம்பாதிக்கணும்னு ஆசை இருக்கறவன். அது நல்லபடியா சம்பாதிக்கணும்னு ஆசைப்படறவன். துட்டு இருக்கற நல்லவனுக்கு நல்லபடியா துட்டு சம்பாதிக்க ஆசைப் படறவன் உதவி, சிநேகிதம். உன்னை மாதிரி ஆளோடதான் என்னால பழக முடியுது. ஏன்னா நானும் உன்னை மாதிரி இருந்தவன்.''

''இப்போதைக்கு நான் வெள்ளைச்சட்டையும், பத்து ரூபா பணமுமாதான் இருக்கேன்.''



''இது பரவாயில்லையே. நான் ரெண்டு ரூபாவோட நான் மெட்ராஸுக்கு என் மாமனைத் தேடிட்டு வந்தேன். மாமன் வீட்டுக்குள்ள நுழைந்தவுடனே சப்பாத்திக்கு மாவு பிசைன்னுதான் சொன்னாங்க. நான் மாவு பிசைஞ்சா சப்பாத்தி நல்லாருக்குன்னு சொன்னாங்க. நாலு வருஷம்... எண்ணி நாலு வருஷம் சப்பாத்தி வேலைதான். அந்த மாமனே பொண்ணு குடுத்து கடையில உக்கார வைக்க பத்து வருஷம் ஆச்சு. இருவத்தோரு வயசுல கல்யாணம். இன்னிக்கு இந்த முப்பத்திரண்டு வயசுல நாலு பசங்க. பதினாலு லட்ச ரூபா சொத்து. ஒரு நாளைக்கு நூறு சப்பாத்தி இட்ட கை இது.''

''பதினோரு வயசுல மெட்ராஸ் வந்தீங்களா?''

''ஆமா.''

''என் லைஃப்பும் அப்படித்தான். படிக்கிறபோது அப்பா வீட்டை விட்டு போனாரு. நான் மூட்டை தூக்கி குடும்பத்தை காப்பாத்தினேன். ஊரு ஜனமும், உறவுக் காரனும் எத்தினி வதைக்க முடியுமோ அத்தினி வதைச்சாங்க.''

''அது நல்லது, அருணாசலம். அப்படி வதைப்பட்டவனுக்குதான் காசு அருமை தெரியும். அப்பன் சம்பாதிச்சு இருபத்தியாறு வயசு வரைக்கும் சோறு தின்னவன் அப்புறம் சம்பாதிக்க சோம்பேறித்தனப்படுவான்.''

''அது சரி... நான் உனக்கு உதவியா?''

''அதுக்குதான் கூப்புட்டேன். வெறும் மாங்காய நம்பிக்கினு இல்லாத வேறு எதுனா செய்யணும்.''

''என்ன செய்யலாம், சொல்லு?''

''என் கிட்ட காசு இருக்கு. உன்கிட்ட உழைப்பு இருக்கு. என்ன செய்யலாம். நீ சொல்லு? இந்த ஊர்ல எது விக்கலாம் சொல்லு. அழுகற பொருள் விக்கற நாம அழுகாத பொருள்லயும் காசு போட்டு வைக்கலாம். எதுல போடலாம்.''

''ஓடு, செங்கல், மரம், இது எல்லாம் இப்ப தங்கத்துக்கு சமானம். ஆனா, அதுக்கு சௌகார்ப்பேட்டை இடமில்லை. கொஞ்சம் தள்ளி யானைக்கவுனிலே போடணும்.''

''போட்டுரலாம். யானைக்கவுனி கிட்டதான். மோட்டார் சைக்கிள்ல போனா மூணு நிமிஷம்.''

சட்டென்று மொத்தமாய் இடம்பிடித்து ஆறு லட்சம் ஓடு வாங்கினான். அருணாசலம் ஆள் பிடித்து வர, நிதானமாய் விற்றான். ஆஸ்பெஸ்டாஸ் அடுக்கினான். ப்ளைவுட்டில் இறங்கினான். சிங்கம் வேட்டையாட புறப்பட்டது. சிறுநரி முன்னால் போய் இரை காண்பித்தது. சிங்கம் இரை தின்ற பிறகு சிறு நரிக்கும் கிடைத்தது.

''ப்ளைவுட்ல துட்டு போட்டது போக மிச்சம் ஏதாச்சம் இருக்கா.'' அருணாசலம் சேட்டைக் கேட்டான்.

''இருக்கு. என்னா வேணும்?''

''ஒரு பார்ட்டி ஒரு லட்ச ரூபா கடன் கேக்குது. பொண்ணுக்கு கல்யாணமாம்.''

''யார் ஆள்?''

''எங்க ஜாதிதான். எங்க ஊருதான். ஆனா, இங்கேயே ரொம்ப காலமா இருந்து நெருப்பு பெட்டி வியாபாரம் பண்றான். பட்டாசுல காசுபோட்டிருக்கான். பட்டுன்னு



பொண்ணுக்கு வரன் அமைஞ்சு போச்சு. வரன் அமைஞ்ச ஒரு வாரம் முன்னாடிதான் நாலு லட்ச ரூபா சிவகாசில கட்டிட்டு வந்திருக்கான். தீபாவளிக்கு இன்னும் நாலுமாசம் இருக்கு. தீபாவளி மறுநாள்தான் அவனால காசு பார்க்க முடியும். நாலு ரூபாய்க்கு நாலு ரூபா நிச்சயம். இப்ப உதவி செய்யறியா?''

''எத நம்பி தர்றது? பட்டாசு வியாபாரம்னு வேற சொல்ற? ஒரு பொறி பட்டுச்சுன்னா கஷ்டமால்ல ஆயிடும். அப்ப போய் காசு கேட்டா எம் மரியாதையில்ல குறையும்.''

''ஆவாது.''

''ஆச்சுன்னா?'' சேட்டு இழுத்தான்.

''நான் கேரண்டி தரேன்.''

''வெறும் கேரண்டி போறாது. எதுனா வை.''

''எனக்குன்னா வச்சுருவேன். இன்னொரு ஆளுக்கு எப்படி வைக்க?''

''உங்க ஊரு ஆளுங்கற. உங்க ஜாதிங்கற. வைக்கக் கூடாதா? தமிழனுக்கு தமிழன் உதவி செய்யறதில்லை. இதே எங்க குஜராத்தி ஆளுன்னா சட்டுன்னு வச்சுருவான். சினேகிதனுக்காக வீட்டை அடமானம் வச்சவன் லட்சம் பேரை தெரியும் எனக்கு. சேட்டுன்னா கேலி பேசறீங்கல்ல... சேட்டுக்கு சேட்டு விட்டுக் கொடுக்கமாட்டான். ஆனா தமிழனுக்கு தமிழன் சாவடிப்பான்.''

''வைக்கறேன்யா.''

அந்த பனியாவின் பேச்சு அருணாசலத்துக்கு ரோஷ மூட்டியது.

''முப்பது பவுன் நகை இருக்கு என்கிட்ட. அது தவிர வீட்ல இருக்கற அத்தினி சாமானையும் அடகு வைக்கறேன். பித்தளை சொம்புலேர்ந்து பீரோ வரைக்கும் வைக்கறேன்.''

''எழுதித் தருவியா?''

''பத்திரம் போட்டு எழுதி எடுத்தா. கையெழுத்து போட்டு தரேன்.''

''எடுத்தாந்துருவேன். அப்புறம் வருத்தப்படக் கூடாது. எதுனா ஆச்சுன்னா சப்ஜாடா எடுத்துட்டுப் போயிடுவேன். கோபப்படக்கூடாது.''

''என்னா கோவம்? எதுக்கு வருத்தம். நீ வியாபாரி. நான் வியாபாரி. அவன் வியாபாரி. நீ கேரண்டி கேக்கறதுல தப்பு என்ன.''

மறுநாள் சேட் பத்திரம் கொண்டு வந்தான். அருணாசலம் கையெழுத்து போட்டவுடன் சிரித்தான்.

''ஏன் சிரிக்கற சேட்டு?''

''நானும் வியாபாரி, நீயும் வியாபாரி. உன்னை நம்பாத நான் உங்க வீட்டு நகைய எழுதிக் கேட்டேன். நீயும் குடுத்துட்ட. எத நம்பி அவனுக்கு ஒரு லட்ச ரூபா கடன் தரா? அப்படி கொடுக்காட்டி, திருப்பித்தர முடியாட்டி என்ன செய்வே...?'' இந்த முறை அருணாசலம் சிரித்தான்.

''என் மனசுல இருக்கறத இப்ப சொன்னேனா அசிங்கமா இருக்கும். சேட்டு செய்துட்டு சொல்றேன்.''

''எது வேணா செய். ஆனா, ஒரு லட்ச ரூபா ஒரு ஆளுக்கு கடன் வாங்கித் தரேல்ல. அதுக்கு அஞ்சாயிரம் ரூபா கமிஷன் எடுத்துக்க. கமிஷன் ஏஜெண்டா என்னைச் சொல்லிடு. நான் எங்கயோ வாங்கித் தரேன்னு சொல்லிடு.''



அருணாசலத்துக்கு அது சரி என்று பட்டது. பட்டாகக்காரனைக் கூட்டி வந்தார். சேட்டுக்கு அறிமுகப்படுத்தி காக வாங்கிக் கொடுத்தார். கமிஷன் போக பட்டாகக்காரனுக்கு தொண்ணூற்றைந்தாயிரம் கிடைத்தது.

காசு கொடுக்கும்போது சேட்டுக்கு புலம்பல் வராமல் இல்லை.

''பட்டாகக்காரனை நம்பி துட்டு கடன் தரேன். நான், நட்சத்திரம் பார்ப்பீங்களா?''

''ஒண்ணும் பாக்கலை. கடவுள் மேல பாரத்தைப் போட்டு வாங்கறம். கல்யாணம் நல்லபடியா முடியணும். அதான் கவலை.''

கல்யாணத்துக்கு சேட்டுக்கும் அழைப்பு வந்தது.

ஓடியாடி, உள்ளே புகுந்து வேலை செய்யும் அருணாசலத்தை சேட் வியப்போடு பார்த்தார்.

''இங்க பார், இவன்தான் கல்யாணப் பெண்ணோட தம்பி. பெங்களூர் டெலிபோன் கம்பெனில வேலை செய்றான். அவன் ஜாதகம் என் தங்கச்சியோட பொருந்தியிருக்கு. இந்தக் கல்யாணம் முடிஞ்ச பிறகு அந்தப் பையனை எங்க பொண்ணுக்குக் கேக்கப்போறேன்.''

''இதுக்குதான் என்கிட்ட கடன் வாங்கினியா?''

''இதுக்குத்தான். என் தப்பா?''

''தப்பில்லை. கல்யாணத்துக்கு சரின்னுட்டா நீ காசுக்கு எங்க போவ?''

''அந்த வேடிக்கைய அப்புறம் பார்.''

கல்யாணம் குறைவற நடந்தது. சேட் ஐந்நூறுரூபாய் ஓதியிட அருணாசலம் ஆயிரம் ரூபாய் ஓதியிட்டார்.

''நீங்க இல்லேன்னா இந்தக் கல்யாணம் நடந்திருக்காது சேட்.'' பட்டாசுக்காரன் கைப்பிடித்துக் கொள்ள, ''நான் இல்ல. நான் உன்னை நம்பித் தரலை. அருணாசலத்த நம்பி குடுத்தேன்.'' சேட் சமயம் பார்த்து வார்த்தையைவிட, தீபாவளி முடிந்து ஒரு வாரம் கழிந்து பட்டாசுக்காரன் வட்டியோடு காசு திருப்புகையில் பத்திரத்தை எடுத்து சேட் அருணாசலத்தின் மடியில் போட்டான்.

''என்னா. நான் துட்டு திருப்பினதுக்கு அவர்மேல பத்திரம் போடற.''

''வாங்கிப் படிச்சுப் பாரு.''

''அதெல்லாம் வேணாம்.'' அருணாசலம் மறுக்க, பட்டாசுக்காரர் பிடுங்கி பிரித்துப் படித்தார். முகம் மாறினார்.

''உங்க வீட்டு நகைய அடமானம் வச்சா எனக்கு கடன் வாங்கிக் குடுத்த...? ஏன் அப்படி?''

''நல்லா இருக்கே கேள்வி. எதுவுமில்லாத உனக்காக ஒரு லட்ச ரூபா கடன் கொடுக்க பைத்தியமா? எங்க ஊரு, எங்க ஜாதி, எங்க மனுஷான்னு வந்து புலம்பினான். ரொம்ப நல்ல குடும்பம்னு உன்னைப்பத்தி பலதும் சொன்னான். அப்படீன்னா உங்க வீட்டு நகையை வாங்கி வச்சு அடமானம் மீட்டுக் கொடுக்கறதுதானேன்னு கேட்டேன். எதுனா முன்ன பின்ன ஆயிருந்தது. அருணாசலம் பழையபடி மூட்டை தூக்கறதுதான் கதியாயிடும். மூட்டை தூக்கி



அருணாசலம் என்னைக்கு நிமிர்றது. கடன் குடுத்தவன் முரட்டு ஆளு. அருணாசலம் தூக்குல தொங்கிவிருப்பான். அப்படி ஒரு ரகளை ஆகிவிருக்கும்.'' பட்டாசுக்காரன் முகம் நீரில் கம்பி மத்தாப்பூ போல கசங்கிப்போனது.

''சரி...அதான் ஒண்ணும் ஆவலையே, விடுங்க.'' அருணாசலம் சமாதானம் சொல்ல,

''உனக்கோ தங்கச்சி இருக்குப்பா. அதைக் கரையேத்தற வழி பாருப்பா.'' சேட்டு, அருணாசலத்திடம் வார்த்தை வீசினான். இந்த முறை அருணாசலத்திடம் வீசிய வார்த்தை பட்டாசுக்காரன் மனசில் விழுந்தது. புஸ்வாணத் திரியில் பட்ட நெருப்புபோல் பற்றிக் கொண்டது. பற்றிக் கொண்ட க்ஷணமே பட்டாசுக்காரன் வார்த்தைகள் பொங்கி வழிந்தன.

''அருணாசலம்! உன் தங்கச்சிய என் பையனுக்குக் கட்டிக்கிறேன். உன்னால் முடிஞ்சதை செய். எப்ப கல்யாணம் முடியுமோ அப்ப செய்.'' கை அறைந்து சத்தியம் செய்து கொடுத்தான்.

வாழ்க்கை திட்டமிட்ட செயலா, தந்திரத்தின் பிரதிபலிப்பா? நல்லதுக்கு நல்லது கிடைக்கும் என்கிற நியதியா, அல்லது எல்லாம் மீறிய கடவுள் செயலா? தெரியவில்லை. அருணாசலம் தொட்டது துலங்கியது. பளபளத்தது. அருணாசலம், பிரகாசமான ஆள் ஆனான். அவன் தங்கையின் கல்யாண வேலைகளில் இறங்கினான்.

''இப்ப செலவுக்கு நீ நகையை அடமானம் வைக்க முடியாது. ஆனா, உனக்கும் நகையில்லாத கடன் தரமாட்டேன். என் குணம் அப்படி. ஒரு லட்ச ரூபா இந்தக்

கல்யாணத்துக்கும் வேண்டாமா. என்ன செய்யப் போற? வேற எதுனா பிஸினஸ் தொடங்கலாமா? அறுவது நாப்பதுன்னு எடுக்கலாமா? உம் பங்கு நாப்பது. எனக்கு எழுதிக்கொடு. அதை வச்சு உனக்கு ஒரு லட்ச ரூபா கடன் தரேன். துட்டுக்கு ஆசைப்பட்டு எதுனா குப்பை பிஸினஸ்ல என்னை இறக்க மாட்டேன்னு நினைக்கிறேன். நல்லா யோசனை செய்.''

''பட்டாசு...'' பளிச்சென்று அருணாசலம் பதில் சொன்னான்.

சேட் திடுக்கிட்டான்.

''அந்தக் கல்யாணத்துக்கு வந்த அத்தினி சிவகாசி ஆளுங்களையும் எனக்குத் தெரியும். நாமே எதிர்க்கடை போட்டா பொண்ணு எடுக்கறவங்களுக்கு பொறுக்காது. அடையாறில போடலாம். மெட்ராஸ் அந்தப் பக்கம் பரவிக்கிடக்கு. வாங்கற ஜனம் அந்தப் பக்கம்தான் அதிகமா இருக்கு. ஒரே இடத்துல குவிக்காத. மயிலாப்பூர், மந்தவெளி, அடையாறு, திருவான்மியூர்னு நாலா பிரிப்போம். நாலு லைசென்ஸ் எடுத்து நாலு இடத்துல கடை போட்டு வியாபாரம் செய்வோம். அடுத்த மாசம் சிவகாசிக்காரங்க அட்வான்ஸ் கேப்பாங்க. இந்த தடவை முக்கால்வாசி அட்வான்ஸ் கேக்கறாங்க. கால்வாசி வாங்கறபோது குடுக்கணுமாம், நான் முழுசா தரேன்னு சொல்லிருக்கேன். எட்டு லட்ச ரூபா சரக்கு. எல்லாம் போக நாலு லட்ச ரூபா கிடைக்கும். ஆனா அறுவதுக்கு நாப்பது இல்லை. அம்பதுக்கு அம்பது. நீ இடத்தைவிட்டு நகரவேணாம். எல்லாம் நான் பாத்துக்கறேன். பில்லு பாத்து



கையெழுத்து போடு போதும். எட்டு லட்ச ரூபா கட்றபோது கூட வா. போதும்.''

சேட்டுக்கு அந்தத் திட்டம் பிடித்திருந்தது. நாலாய் பிரித்தது பல வகையிலும் அவனுக்குப் பிடித்திருந்தது. சரக்கு பிரியும். கணக்கு பிரியும். மனைவி பெயரில், மைத்துனன் பெயரில், தன் பெயரில், அருணாசலத்தின் பெயரில் நாலு இரண்டு லட்ச ரூபாய் கொடுத்தான், அதில் வரும் லாபத்தை எழுதி உத்தரவாதமாக வாங்கிக் கொண்டு ஒரு லட்ச ரூபாய் கடன் கொடுத்தான்.

சித்திரை வெயிலில் அருணாசலத்தின் தங்கை கல்யாணம் நடந்தது. வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி என்று காத்திருந்தார்கள். சரக்கு வாங்கினார்கள்.

தீபாவளி எல்லோரும் கொண்டாடும் பண்டிகையாக அப்படி கொண்டாடுவது கௌரவமாக இருந்த காலம் அது. தென் சென்னையில் முதன்முதல் கோடவுன் திறக்க, நல்ல விளம்பரம் செய்ய, கூட்டம் நாலு கடைகளிலும் குவிந்தது. தீபாவளிக்கு இரண்டு நாள் முன்பே எல்லா சரக்குகளும் தீர்ந்து போயிற்று.

சேட் காரிலிருந்து கடையைப் பார்த்ததோடு சரி. போலீஸுக்கும், தீயணைப்புப் படை லைசென்ஸுக்கும், கார்ப்பரேஷன் அனுமதிக்கும் அருணாசலமே அல்லாடினான். ரயில்களை நம்பாமல் லாரிகளில் சரக்கு குவித்தான். நூத்துக்கு நூறு லாபம் கிடைக்கிற வியாபாரம் அது. எல்லா செலவும் போக ரெண்டு லட்சத்துக்கு மூணரை லட்சம் அவன் பங்கு வந்தது.

சேட் வட்டி வாங்கவில்லை. அசல் மட்டும் எடுத்துக் கொண்டு லட்சத்து ஐம்பதாயிரத்தைத் திருப்பிக் கொடுத்தான். தீபாவளி பரிசாக அருணாசலத்துக்கு மோதிரம், அவன் தங்கைக்கு பட்டுப்புடவையும் அனுப்பினான்.

மறுபடியும் தங்கத்துக்கு மவுசு வருது. காசு போட்டு பயப்பட வேண்டாத தொழில் அது. லாபத்துல தான் நஷ்டம் வரும். மெட்ராஸ்ல நல்ல இடம் சொல்லு. சேட்டும், அருணாசலமும் அலையாய் அலைந்து சென்னையில், உஸ்மான் ரோடில் இடம்பிடித்தார்கள். தொண்ணூத் தென்பது வருடத்திற்கு லீஸ் எடுத்தார்கள்.

அந்த வீட்டு முன்பக்கத்தை இடித்துக் கடையாக் கினார்கள், சேட் சௌகார்ப்பேட்டையிலிருந்து கொத்தவால் சாவடி வியாபாரத்தை கைவிட்டு விட்டு எத்தனை போட்டாலும் கொள்ளும் என்கிற தங்க பிஸினஸுக்கு போனான். போகும்போது அருணாசலத்தை நம்பிக்கை யானவன் என்று மற்ற பனியாக்களுக்கு உறுதி சொன்னான். அந்த சேட்டின் நட்பால் அருணாலத்தின் பாரம் குறைந்தது.

எலெக்ட்ரிகல் டிப்ளமா படித்துவிட்டு அதைக் கற்றுக்கொடுக்கும் ஆசிரியப் பயிற்சியை முடித்துவிட்டு தம்பி கைகட்டி அண்ணன் எதிரே நிற்கும்போது அவனை நல்ல வேலையில் அமர்த்த வேறு ஆள் உதவி தேவைப் பட்டது. தேவைப்பட்ட நேரத்தில் அருணாசலத்துக்குக் கிடைத்தது. அதற்காக ஒரு தியாகம் செய்ய வேண்டி யிருந்தது. அந்த தியாகத்தின் பெயர் திருமணம், அருணாசலத்தின் திருமணம்.



## 5

காய்கறிகள் மகிமையானவை. ஆனால், அவை பரிசளிப்புக்கு ஏற்றவை என்று எவரும் புரிந்து கொள்வ தில்லை. காய்கறிகள் எல்லோருக்கும் விருப்பமானவை. ஆனால், இரண்டு முட்டைகோஸ்கள் கையில் கொடுத்தால் எல்லோருக்கும் வெட்கமாகிவிடுகிறது. பரிசளிப்பு என்றால் பழமோ, பூவோதான் முக்கியமாகிப் போகிறது.

''உன்னைய நீ படிச்ச வேலைல வைக்கிறதுக்கு யார் இங்கே பெரிய ஆளு?''

தம்பி, நடராஜன் என்கிறவர் பெயரைச் சொன்னான்.

கல்வி அமைச்சகத்தில் செயலாளராக இருப்பதைச் சொன்னான். ஐயரா இருப்பாரோன்னு தோணுது என்று சொன்னான். அவர் வீட்டு விலாசம் சொன்னான்.

காலை பத்து மணிக்கு வேலை முடித்து படுப்பதற்குப் பதிலாக ஆட்டோவில் ஒரு மூட்டை காய்கறிகளை ஏற்றிக் கொண்டு அருணாசலம் கல்வி அமைச்சகத்தின் செயலாளரைத் தேடினார்.

ஐயா இருக்க மாட்டார் என்று தெரிந்துகொண்டே, ''ஐயா இல்லீங்களா?'' என்று கேட்டார். அம்மா கதவுதிறக்க, கோணி அவிழ்த்து காய்கறிகளைக் கீழே கொட்டினார். பட்டணத்துக்கு வந்த பிறகு அத்தனை பசுமையான காய்கறிகளை அந்த ஐயரம்மா பார்த்ததேயில்லை.

''என்ன இது...'' ஐயரம்மா பதறினாள்.

''ஐயாவ ரொம்ப நாளா பாக்கணும்னு ஆசைங்க. இன்னிக்குத்தான் முடிஞ்சுது. பெரியவரை வெறுங்கையால பார்க்க வரலாங்களா?''

''ஐயாவ முன்னமயே தெரியுமா''

''இனிமேதாங்க தெரிஞ்சுக்கணும்.''

''நீ யாருன்னு தெரியாத இதை நான் வாங்கிக்க முடியாது. எடுத்துண்டு போ.''

''கோணி கிழிச்சிட்டேனே.''

''அதெல்லாம் தெரியாது. எடுத்துட்டுப் போ. ஐயா பார்த்தார்னா என்னைத் திட்டுவார்.''

''அப்படியா!''

''கோணி எடுத்தாந்து வாரிட்டுப் போறேங்க. அது வரைக்கும் இங்கயே இருக்கட்டுங்க.''

பச்பச்சென்று இருக்கும் காய்கறியை விட யாருக்கு மனசு வரும். அந்தம்மாள் குவியலிலிருந்து இரண்டு கை அவரைக்காய் எடுத்து சமையல் செய்தாள். ஐயா வந்த பிறகும் அருணாசலம் வரவில்லை. மறுநாள் காலை இரண்டு கை பீன்ஸ் சமையலுக்கு எடுத்தாள். மத்தியானம் கத்திரிக்காயும் முருங்கைக்காயும் எடுத்தாள். சாயங்கால டிபனுக்கு வாழைக்காயும் வெங்காயமும் பஜ்ஜி போட எடுத்தாள். இரவு சாப்பாட்டுக்கு முட்டைகோஸ் எடுத்தாள். கீரைக்கட்டு எடுத்தாள். காசு கொடுத்துவிடலாம் என்று நினைத்தாள்.

இரண்டு நாள் கழித்து ஒரு ஞாயிற்றுக்கிழமை அருணாசலம்வர, ஐயாவும் அம்மாவும் கத்தினார்கள்.

''வாரிட்டு போ எல்லாத்தையும்'' என்று கூச்சலிட்டார்கள்.



வாரிக் கொண்டு போக அங்கு பாதிகூட இல்லை.

'ஏன் உடனே வரலை' என்று சீறினார்கள்.

அருணாசலம் முழுக்கைச் சட்டையை விலக்கிக் காட்டினான்.

''கோணி வாங்கணும்னுதாங்க வெளில போனேன். ஸ்கூட்டர்காரன் ணங்குன்னு கொத்திதூக்கிப் போட்டுட்டான். நடுத்தெருவுல அலங்கோலமா விழுந்து பேஜாராயிப் போச்சு. இடதுகை மணிக்கட்டாண்ட அடி. புத்தூர் போய் கட்டு போட்டுட்டு வரேன்.'' சட்டையை விலக்கி இடதுகை காட்டினான். அடியே படாத கையில் அவன் தம்பியே சிம்பு வைத்து கட்டியது காட்டினான்.

''சரி... உனக்கு என்ன வேணும். ஏன் காய்கறி கொண்டு வந்து இறக்கினே.''

''ரோடுல பார்த்துப் போகப் படாதா.'' மாமி பரிதாபப் பட்டாள்..

''என்னால மூட்டை தூக்க முடியுமுங்க.''

''சொல்லு... எதுக்கு காய்கறி கொண்டு வந்து கொடுத்தே.''

''பத்து தலைமுறையா படிப்பு வாசனையே இல்லாத குடும்பமுங்க. அதில் நான்தான் எட்டாவது பாஸ் பண்ணினேன். என் தம்பிதான் மொத மொத டிப்ளமா படிச்சிருக்கான். நீங்க சொன்னா வேலை கிடைக்கும்னாங்க. படிப்பறிவு இல்லாத காட்டு ஜனம் சாமி நாங்க. இந்த தலைமுறைலதான் வெள்ளைச்சட்டை போட ஆரம்பிச்சோம். நீங்க மனசு வைக்கணும் சாமி.'' காலில் விழுந்தான்.

''அப்படியா சேதி! முதல்ல காய்கறிக்கு காசு வாங்கிக்கோ.''

''வேணாங்க.''

''வாங்கணும்!'' ஐயர் கத்தினார்.

''சரிங்க.'' ஒரு மூட்டை காய்கறிக்கு பத்து ரூபாய் வாங்கினான்.

அப்போது கொண்டு வந்திருந்த பெரிய பையை வீட்டு வாசலில் வைத்துவிட்டு போனான்.

தின்று ருசிகண்ட குடும்பம். எல்லாம் தீர்ந்த பிறகு அவன் எப்போது வருவான் என்று ஏங்கத்துவங்கியது. அரை கிலோ உருளைக்கிழங்கு ஆறு ரூபாய் என்று வாங்க, ஐயோ அந்த அருணாசலம் வந்தா நல்லா இருக்குமே என்று ஆதங்கப்பட்டது. அப்படி ஏங்குவார்கள் என்று அருண்ணாசலத்துக்குத் தெரியும்.

பத்து நாள் கழித்து வெறும் கையோடு போய் கும்பிட்டான். ஐயர் வரவேற்றார், அந்த மாமி, ''ஒண்ணும் கொண்டு வரலையா?'' என்று வாடினாள்.

''ஊர்ல இல்லீங்க. தம்பிக்கு வேலை விஷயமா அங்க இங்க அலைஞ்சுக்கிட்டிருந்தேன். பேரு பெரிசா இருக்கே தவிர நல்லபடியா வேலை செய்யற இடம் கிடைக்கலீங்க.''

''அதான் நான் பாக்கறேன்னு சொன்னேனோன்னோ. உன் தம்பிய அப்ளிகேஷன் கொண்டு வந்து கொடுக்கச் சொல்லு.'' ஐயர் உத்தரவிட்டார்.

ஐயரின் மனைவி சின்ன கத்தரிக்காய் இரண்டு கிலோ கேட்டாள். முடிந்தால் ஆவக்காய் ஊறுகாய் போட மாங்காய் கொண்டு வரச்சொன்னாள். நல்லதாய் நாலு முருங்கைக்காய்



கொண்டுவரச் சொன்னாள். இந்த முறை அருணாசலம் தம்பியை மூட்டையோடு அனுப்பினார்.

ஐயரை இடைவிடாது காய்கறியால் அடித்தார். அரசு நிதி உதவி அளிக்கும் கல்லூரியில் நாலே மாதத்தில் கோயம்புத்தூரில் அருணாசலத்தின் தம்பி ஆசிரியராய் சேர்ந்தான்.

அந்தப் பக்கத்து காய்கறிக்காரனைப் பிடித்துப் போட்டதில் அவன் மூட்டையோடு,வாரம் ஒரு முறை ஐயருக்கென்று ஒரு மூட்டை இறங்கியது. இது லஞ்சம்தான். நெஞ்சு நிறையச் செய்யும் லஞ்சம். வாயை மணக்கச் செய்யும் லஞ்சம்.

அருணாசலம் ரொம்ப நல்ல மாதிரி என்று பேசவைக்கும் லஞ்சம். அடுத்த தம்பியும் பட்டப்படிப்பு முடித்து காத்திருக்க, அவனுக்கு எப்படி அலைவது என்று யோசித்துக் கொண்டிருக்க, நெய்வேலியில் ஆள் எடுப்பதாய் அறிந்து மனு போட அருணாசலம் அங்கு போனார். கடும் போட்டி இருந்து. யாரைப் பார்ப்பது என்பதே புரியாமல் போய்விட்டது. அவன் காய்கறி லஞ்சம் செல்லுபடியாகுமா என்று தெரியாமல் இருந்தது.

''அங்கே வேலை செய்து ரிடையராகற ஒரு ஆளை வைச்சுக்குறாங்களாம். ஒரு ஃபோர் மன் ரிடையராகிறார். போய்ப் பாருங்க.'' யாரோ சொன்னார்கள்.

போய்ப் பார்த்ததில் வீட்டில் யாரும் சுமுகமாய் பேச்சு கொடுக்கவில்லை. பெண் பிடிக்கவில்லை என்று பதினேழாம் முறையாய் அந்த வீட்டு மூத்தபெண்ணுக்குக் கடிதம்வர, அவர்கள் சோர்ந்து போயிருந்தார்கள,

அருணாசலம் அவர்களைப் பற்றி விசாரித்தான். வேலூர் முதலியார் என்று அறிந்து கொண்டான். யோசித்தான், மாம்பலம் தரகர் மூலம் அவர்கள் வீட்டுப் பெண்ணுக்கு தன் ஜாதகம் கொடுத்தனுப்பினான். சரிப்பட்டா பார்ப்பம். இல்லனா தம்பிக்கு வேற எங்கனா வேலை தேடுவம் என்றுதான் நினைத்தான்.

முதலியார் இனத்தில் வேறு இடத்தில் பெண் எடுப்பதில்லை. கொடுப்பதுமில்லை. ஆனால், மரபுகள் சிதையத் துவங்கிய காலம் அது. ஒரு மாதம் கழித்து அவனைப் பெண் பார்க்க கூப்பிட்டார்கள். அவன் பார்க்காமலேயே பெண் பிடித்திருக்கிறது என்று எழுதி அனுப்பினான். அந்த ஃபோர்மன் ஓடிவந்தார். அவனை சந்திக்குமுன் கொத்தவால் சாவடியைச் சுற்றி பனியாக்களிடம் அவனைப் பற்றிக் கேட்டார்.

அவன் நல்லவனான்னு கேக்கறியா, அவனை ஒரு லட்ச ரூபாய்க்கு நான் நம்புவேன். நல்லவனா கெட்டவனான்னு நீ தீர்மானம் பண்ணிக்க.''

''யார் நல்லவன்... யார் கெட்டவன், அருணாசலம் எங்கவும் பூந்து பொறப்படுவான் எப்பனா சிகரெட் குடிப்பான். அதத் தவிர எனக்கு தெரிஞ்சு வேறெந்த கெட்ட பழக்கமும் இல்லை.''

''வியாபாரியை வந்து விசாரிக்கலாமா? ஒரு இடத்துல நல்லவன்னுவாங்க. ஒரு இடத்துல கெட்டவன்னுவாங்க. இதை வச்சு என்ன முடிவு பண்ணப்போறீங்க. அவன் சாமர்த்தியக்காரன். துட்டு நல்லா பொரளுது. கஷ்டப்பட்டு மேல வந்தவன். இந்தத் தெருவுல அவன் மூட்டைத் தூக்கிட்டுப் போனது இன்னும் என் கண்ணுல இருக்கு.



ரொம்ப அவசியம்னா அவன் பொண்ணு குடுத்த இடத்துல கேள். அங்கு நல்லபடியா சொன்னா வேறெங்கயும் தப்பா சொல்லமாட்டாங்க.''

ஃபோர்மேன் பட்டாசுக்காரனைப் பார்த்தார். பட்டாசுக்காரனுக்கு சீர் செனத்தியில் முன் பின் குறையிருந்தாலும் தன் வீட்டு நகையை அடகு வைத்து தனக்கு காசு கொடுத்தது ஞாபகம் இருந்தது. அந்த நன்றி நெஞ்சில் இருந்தது.

''பொண்ணு குடுக்கலாங்க. தப்பு வராது. உங்க பெண்ணு உக்காந்து வீட்டைப் பார்த்துக்கிச்சுன்னா அந்தாள் உலகம் முழுக்க ஜெயிக்சுக் கொண்டாந்து வீட்ல போடுவான். எவ்வளவு கேப்பாங்கன்னு நான் என்ன சொல்ல முடியும். எம்பேர் சொல்லுங்க. அதிகம் கேக்கமாட்டார். எனக்குப் பழக்கம்னு சொல்லுங்க. மரியாதையா பேசுவார்.''

அருணாசலத்தை அந்த நெய்வேலிக்காரர் ஒரு பனியாவின் கடையில் பார்த்து பேசினார்.

''என் தம்பிக்கு வேலை பண்ணிவைங்க. மத்தது உங்க இஷ்டம்.''

''பொண்ணு பார்க்க வரவேணாமா?''

''பொண்ணு என்னைப் பார்க்கணும்னு சொல்லிச் சுன்னா வரேன்.''

''எங்க பொண்ணு அப்படி கேக்காது. பொண்ணைப் பெத்தவ கேப்பாங்கல்ல... யாரு புள்ள? கறுப்பா செவப்பான்னு கேப்பாங்கல்ல.''

''சரி, பட்டாசுக்காரரைக் கூட்டிட்டு வரேன். என் சம்பந்தி என்ன சொல்லறாரோ அதுக்கு கட்டுப்படறேன்.''

பட்டாசுக்காரருக்கு ஒரு வருத்தம் இருந்து. ''சேட்டுக் கூட சேர்ந்து எனக்கு எதிரா கடை போட்டுட்டல்ல.''

''எதிரா போடலையே.''

''சரி... முதுகுக்கு பின்னாடி போட்டுட்ட. என் பேர்பாதி வியாபாரம் போச்சு.''

''அடுத்த வருஷம் வுட்டுட்டமே. நமக்கு சரிப் படாதுன்னு இழே போட்டுட்டமே.''

''அதனாலதான் உனக்கு பெண்ணு பார்க்க வரேன். தொடர்ந்து போட்டிருந்த, உங்க வீட்டுப் பொண்ணை உங்கிட்ட அனுப்பி கண்டிக்க சொல்லியிருப்பேன்.''

''இத்தினி வருத்தப்படுவீங்கன்னு தெரியாது. தெரிஞ்சா செய்திருக்க மாட்டேன்.''

''இதுக்கு தண்டனையா...''

''என்ன செய்யணும் சொல்லுங்க.''

''எனக்கு மயிலாப்பூர் பக்கம் கடை போட்டு நடத்திக் கொடு. நான் துட்டு தரேன். அந்தக் கூட்டத்தை வளைச்சுப் போடு.''

''வேணாம். அங்க சிவகாசி ஆளே பூந்துட்டான். நாம போட்டி போட முடியாது. இன்னும் தள்ளி போடுவம். மயிலாப்பூர் ஐயரெல்லாம் நங்கநல்லூர் போயிட்டாங்க. பழவந்தாங்கல், நங்கநல்லூர், தாம்பரம் போடுவம்.''

''ரொம்ப தொலைவு அருணாசலம். போயிட்டு வரது கஷ்டமில்ல?''

''நீ முதல் போடறதோடு சேர்த்து எனக்கு மோட்டார் சைக்கிள் ஒண்ணு வாங்கிக் குடுத்துடு. நாய் மாதிரி நான்



அலையறேன். தினம் ராத்தரி கலெக்ஷன் கொண்டாந்து கட்டறேன்.''

''ரொம்ப சந்தோஷம் அருணாசலம்.''

''என்னை நெய்வேலில அடிமாட்டு விலைக்கு தள்ளிவுட்றாதீங்க சம்பந்தி.''

''நீ நம்ம பையன். நானா முன்ன வந்து செய்திருக்கணும்''

பேச்சு இனிமையாய் முடிந்தது. சீர்செனத்தி பற்றி சிக்கல் இல்லாது ஒப்புக் கொண்டார்கள்.

''உன் தம்பிக்கு வேலை நானாச்சு.'' அவர் வாக்குறுதி கொடுத்தார்.

தம்பி வேலைக்கு சேர்ந்த மறுமாதம் நெய்வேலி கம்யூனிடி சென்டரில் அருணாசலம் தாலி கட்டினான், தாலிகட்டி மறுவீடு புகுந்து மறுவாரமே பதினைந்து லட்ச ரூபாய் டிமாண்ட் டிராஃப்ட்டோடு மனைவியோடு சிவகாசி போனான். சிவகாசிதான் அவன் தேனிலவு இடம். மாமனார் பெயரில் வேறொரு பட்டாசுக் கடையில் ஒரு லட்ச ரூபாய் முதலீடு செய்தான்.

ரிடையராகிய மாமனாரை நெருப்புப் பெட்டி வியாபாரம் செய்யச் சொன்னான். நெய்வேலியில் பட்டாசுக்கடைக்கு சரியான இடம் பார்த்துச் சொன்னான். போக்குவரத்து செலவு இல்லாமலேயே நெய்வேலியில் சரக்கு இறக்க முடியும் என்று தெரிந்து கொண்டான், சிவகாசியிலிருந்து மதுரை போனான். மதுரை மார்க் கெட்டில் சுற்றிவிட்டு கிராமத்துக்குப் போனான். வெள்ளைச்சட்டையும், மல்வேட்டியும், மைனர் செயினுட்

மூன்று மோதிரங்களும், சந்தனசோப்பு வாசனையும் அருகே தலை நிறைய பூ வைத்த மனைவியுமாய் ஊருக்கு வந்த அருணாசலத்தை ஊர் வியந்து பார்த்தது.

ஊர் மாறவில்லை. உறவுகள் யாரும் உயரவில்லை. உபத்திரவம் கொடுத்த தாய்மாமனுக்கு கண் தெரிய வில்லை. ஆனால், ஓடிப்போன தந்தை ராமேஸ்வரத்தில் இருக்கிறார் என்று தெரிந்தது.

அவன் மனைவி அமிர்தவல்லி அவன் சிறு வயதுக் கதையைக் கேட்டு கண்ணீர் வடித்தாள். அவன் வாழ்ந்த வீட்டு தூசியை எடுத்து நெற்றியில் இட்டுக் கொண்டாள். ராமேஸ்வரத்துக்கு போய் அப்பாவைத் தேடிக் கண்டு பிடித்து வணங்க வேண்டும் என்றாள்.

அவசியமா என்று அருணாசலம் யோசித்தான்.

''நம்ம புள்ளைங்க நல்லா இருக்கணுமில்ல. ராமேஸ் வரம் போய் கடல் ஸ்நானம் பண்ணி சாமி கும்பிட்டா நமக்கு பொறக்கிற குழந்தைங்க நாம இப்ப இருக்கறதைவிட நல்லா இருக்குமில்லை...?''

''அதெப்படி இருக்கும்.'' அப்பா கேட்டார். சமுத்திரக் கரையில் சங்கர மடத்துத் தூணில் பழைய வேட்டியும் பரட்டைத் தலையுமாய் இருந்த அப்பாவை புருஷனும் மனைவியும் வணங்கியபோது, ''கொடிது... கொடிது... வறுமை கொடிது. அதனினும் கொடிது இளமையில் வறுமை'' என்றார்.

புருஷனும் மனைவியும் அர்த்தம் தெரியாமல் விழித்தார்கள்.

''இவரு வாழ்க்கை என்னமோ ஆச்சு. எப்படியோ உசந்துட்டார். எங்க புள்ளைங்க இத்தினி கஷ்டப்படாம



நல்லா வளரணும்.'' அமிர்தவல்லி வேண்டுகோள் விடுக்க, ''அதெப்படி முடியும்' என்று பதில் வந்தது.

அருணாசலம் வாழ்க்கையில் முதன் முறையாக திகைத்தார்.

''சாபமடா! ஆறு தலைமுறையாக வர சாபம். நம்ம குழந்தைங்க இளம் வயசுல கஷ்டப்பட்டே ஆகணும்கற சாபம். அதை நீயோ நானோ தீர்க்க முடியாது.''

''நான் ஆறாவது தலைமுறையா?''

''இல்லை. அஞ்சாவது.''

''ஐயோ...'' அமிர்தவல்லி மனம் நடுங்கிக் கூறினாள். எம் புள்ளையும் கஷ்டப்படுமா? இவுரு மாதிரி மூட்டை தூக்குமா? உங்களை மாதிரி வீட்டை விட்டு ஓடிப் போகுமா?''

''அப்படிப் போகக்கூடாதுன்னுதானே நான் இப்படி உக்காந்துருக்கேன். என்னோட வினை அறுக்கணும்னு தானே எல்லாத்தையும் விட்டுட்டு இப்படி உக்காந்துருக் கேன். ஆனாலும்...''

''என்னப்பா ஆனாலும்... கத்தி விழற இடத்துல கட்டைவுழும்.''

''என் பசங்க நல்லா நிக்கணுமே'' – அமிர்தவல்லி அரற்றினாள்.

''நிக்கும்... ரொம்ப நல்லா நிக்கும். நம்ம எல்லா ரையும்விட ரொம்ப உயர்ந்த இடத்துக்குப் போகும்.''

''எனக்கு எதுனா சொல்லுங்கப்பா.'' அப்பாவின் மீதிருந்த ஆத்திரம் எல்லாம் மறைந்து அருணாசலம் கை கூப்பினார்.

''உலகம்னா பகல் இருட்டு இருக்கும். இருக்கறது தான் நல்லது. ஒரேயடியா வெளிச்சமோ, ஒரேடியா இருட்டோ ஆகாது.''

''ஆமாம்ப்பா.''

''சொல்லிட்டேன்.''

''என்னப்பா...''

''உனக்கு சொல்ல வேண்டியதை சொல்லிட்டேன்.''

''என்கூட மெட்ராஸ் வந்துடேம்பா.'' அப்பாவை அரை மனசாய்தான் அருணாசலம் கூப்பிட்டார்.

''மெட்ராஸு என் கால் கட்டை விரல் நுனில இருக்கு.''

''புரியலையே.''

''நீ துடிச்சா என் விரல் துடிக்கும். நீ சிரிச்சா என் விரல் சிரிக்கும். உனக்கு பசிச்சா என் விரலுக்கும் பசிக்கும். நான் என்னாத்துக்கு மெட்ராஸ் வரது? நீ போ. நல்லாரு.''

''போயிட்டு வான்னு சொல்லுங்களேம்பா.''

''நீ போ. நல்லாரு.'' சங்கர மடத்துக்கு உள்ளே போய் பெரிய வெங்கடாசலபதி படத்துக்கு சார்த்தியிருந்த கதம்ப மாலையைக் கேட்டு வாங்கி பந்தாய் சுருட்டி ஆழ முகர்ந்து அப்பா அமிர்தவல்லிக்குக் கொடுத்தார்.

''நான் தொங்க தொங்க தாலி கட்டிக்கிட்டு சுமங்கலியா போகணும்.''

அப்பா சிரித்தார். ''கட்டிக்கிட்டது போதும்னு நினைக்கற வரைக்கும் கழுத்துல தொங்கும். போய் வா.''

''அவளை மட்டும் போய் வான்னு சொல்றீங்க.''



''நான் சொல்லலை.'' அப்பா கடல் பார்க்க உட்கார்ந்து விட்டார்.

அந்த செய்கையில், நீ பேசியது போதும் கிளம்பு என்கிற அர்த்தம் இருந்தது. அருணாசலம் குழம்பிய மனசாய் வீடு வந்தார். அமிர்தவல்லி தெளிந்த மனசாய் மாமனாரை தெய்வத்தின் சாயலென்று தெரிந்து வந்தாள். அவர் பழைய படத்தை தூசுதட்டி வீட்டில் மாட்டினாள். அதைக் கும்பிட்ட பிறகே சமையல் வேலை செய்தாள். அம்மாவிடம் விஷயம் சொன்னாள்.

''பொண்டாட்டிய வச்சு குடித்தனம் செய்யத் தெரியலை. அந்தாள் குறி சொல்லி எனக்கென்னா, குறி சொல்லாட்டி எனக்கென்னா?''

அம்மா அதுபற்றி அக்கறையே படவில்லை.

தம்பிகள் விவரம் தெரிந்து போய் தேடியபோது பெரியவர் கிடைக்கவில்லை. அமிர்தவல்லி சூலுற்றாள். மூத்தது பிள்ளை பெற்றாள். இரண்டு வருடம் கழித்து அடுத்தது ஒரு பிள்ளை பெற்றாள். இன்னொரு இரண்டு வருடம் கழித்து ஒரு பெண் பெற்றாள்.

சுமைகள் ஏற வியாபாரம் பெருகியது. வியாபாரம் பெருக சுமைகள் ஏறின.

பனியாக்கள் முற்றிலுமாக ஆக்கிரமித்துக் கொண்ட கொத்தவால் சாவடியில் கமிஷன் வியாபாரம் செய்வதே உத்தமம் என்று தோன்றியது. கடை போட பெருந்தொகை தேவைப்பட்டது. ஆனால், சிந்தாதிரிப்பேட்டையில் சொந்த வீடு வாங்க முடிந்தது.

அருணாசலம் அம்மா சடக்கென்று ஒரு நாள் படிசறுக்கி மயக்கமானாள். ஆஸ்பத்திரியில் இறந்து

‘‘உலகம்னா பகல் இருட்டு இருக்கும். இருக்கறது தான் நல்லது. ஒரேயடியா வெளிச்சமோ, ஒரேடியா இருட்டோ ஆகாது.’’

‘‘ஆமாம்ப்பா.’’

‘‘சொல்லிட்டேன்.’’

‘‘என்னப்பா...’’

‘‘உனக்கு சொல்ல வேண்டியதை சொல்லிட்டேன்.’’

‘‘என்கூட மெட்ராஸ் வந்துடேம்பா.’’ அப்பாவை அரை மனசாய்தான் அருணாசலம் கூப்பிட்டார்.

‘‘மெட்ராஸு என் கால் கட்டை விரல் நுனில இருக்கு.’’

‘‘புரியலையே.’’

‘‘நீ துடிச்சா என் விரல் துடிக்கும். நீ சிரிச்சா என் விரல் சிரிக்கும். உனக்கு பசிச்சா என் விரலுக்கும் பசிக்கும். நான் என்னாத்துக்கு மெட்ராஸ் வரது? நீ போ. நல்லாரு.’’

‘‘போயிட்டு வான்னு சொல்லுங்களேம்பா.’’

‘‘நீ போ. நல்லாரு.’’ சங்கர மடத்துக்கு உள்ளே போய் பெரிய வெங்கடாசலபதி படத்துக்கு சார்த்தியிருந்த கதம்ப மாலையைக் கேட்டு வாங்கி பந்தாய் சுருட்டி ஆழ முகர்ந்து அப்பா அமிர்தவல்லிக்குக் கொடுத்தார்.

‘‘நான் தொங்க தொங்க தாலி கட்டிக்கிட்டு சுமங்கலியா போகணும்.’’

அப்பா சிரித்தார். ‘‘கட்டிக்கிட்டது போதும்னு நினைக்கற வரைக்கும் கழுத்துல தொங்கும். போய் வா.’’

‘‘அவளை மட்டும் போய் வான்னு சொல்றீங்க.’’



‘‘நான் சொல்லலை.’’ அப்பா கடல் பார்க்க உட்கார்ந்து விட்டார்.

அந்த செய்கையில், நீ பேசியது போதும் கிளம்பு என்கிற அர்த்தம் இருந்தது. அருணாசலம் குழம்பிய மனசாய் வீடு வந்தார். அமிர்தவல்லி தெளிந்த மனசாய் மாமனாரை தெய்வத்தின் சாயலென்று தெரிந்து வந்தாள். அவர் பழைய படத்தை தூசுதட்டி வீட்டில் மாட்டினாள். அதைக் கும்பிட்ட பிறகே சமையல் வேலை செய்தாள். அம்மாவிடம் விஷயம் சொன்னாள்.

‘‘பொண்டாட்டிய வச்சு குடித்தனம் செய்யத் தெரியலை. அந்தாள் குறி சொல்லி எனக்கென்னா, குறி சொல்லாட்டி எனக்கென்னா?’’

அம்மா அதுபற்றி அக்கறையே படவில்லை.

தம்பிகள் விவரம் தெரிந்து போய் தேடியபோது பெரியவர் கிடைக்கவில்லை. அமிர்தவல்லி சூலுற்றாள். மூத்தது பிள்ளை பெற்றாள். இரண்டு வருடம் கழித்து அடுத்தது ஒரு பிள்ளை பெற்றாள். இன்னொரு இரண்டு வருடம் கழித்து ஒரு பெண் பெற்றாள்.

சுமைகள் ஏற வியாபாரம் பெருகியது. வியாபாரம் பெருக சுமைகள் ஏறின.

பனியாக்கள் முற்றிலுமாக ஆக்கிரமித்துக் கொண்ட கொத்தவால் சாவடியில் கமிஷன் வியாபாரம் செய்வதே உத்தமம் என்று தோன்றியது. கடை போட பெருந்தொகை தேவைப்பட்டது. ஆனால், சிந்தாதிரிப்பேட்டையில் சொந்த வீடு வாங்க முடிந்தது.

அருணாசலம் அம்மா சடக்கென்று ஒரு நாள் படிசறுக்கி மயக்கமானாள். ஆஸ்பத்திரியில் இறந்து

போனாள். மூன்று பெற்று காதோரம் நரைத்து வீட்டுக்கு மூத்தவனாய் மாறிய அருணாசலத்தை அதற்குப் பிறகு அருணாசல முதலியார் என்று அழைத்தார்கள். கமிஷன் ஏஜெண்ட், காய்கறி தரகு, நடைபாதை சங்க கௌரவ ஆலோசகர், காரணீஸ்வரர் கோயில் உற்சவக் கமிட்டி உறுப்பினர், ரோட்டரி கிளப்பில் செயலாளர் - ஏதேதோ பதவிகள் ஒப்புக்கொண்டார். வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது.

கல்யாணமான தம்பியும், கல்யாணமாகாத தம்பியும் வீடு கட்டிக் கொண்டார்கள். அண்ணனைக் கூப்பிட்டு விருந்து வைத்தார்கள். அண்ணன் குழந்தைகளுக்கு துணிமணி எடுத்துக் கொடுத்தார்கள்.

பெரியவன் ஆறாவது, அடுத்தவன் நாலாவது, கடைசி தம்பி ஒன்றாவது என்று பந்தியில் உட்கார்ந்து கறி சோறு சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் இதுவா வறுமை... இளமையில் வறுமை... எப்படி வெட்டுது பாரு நம்ம பசங்க'' என்று அமிர்தவல்லிக்குக் காட்டியபோது அப்படிப் பார்க்கக்கூடாது என்று அமிர்தவல்லி சத்தம் போட்டாள்.

பார்த்த நேரம் மோசமான நேரம்.

அடுத்த தீபாவளிக்கு ஆறு லட்ச ரூபாய் வீட்டை அடகு வைத்து அவரே பட்டாசுக் கடை போட தீர்மானித்தார். யாரும் பாகஸ்தராக இருக்க வேண்டாமென்று உள்ளே தீர்மானம் வந்தது. பிறருக்கு உழைத்தது போதும். தனக்குத்தானே உழைக்க வேண்டும் என்று தீர்மானம் வந்தது.

பட்டாக வாங்கப் போகும்போது சிலோன் தமிழர்கள் சிவகாசியில் அவரை சந்தித்தார்கள். குட்டிமணி, ஜெகன் குத்திக் கொல்லப்பட்ட நேரம் அது. தமிழர்களை



சிங்களவர்கள் வெட்டிக்கொன்ற காலம் அது. தமிழ்தேசம் அவர்களுக்காய் துடித்தெழுந்தது.

''என்னடா தம்பிகளா வேணும்.''

''வெடிமருந்து வேணும். எங்க போராட்டத்துக்கு வேணும். பட்டாசு கொடுங்களேன். நாங்க பிரிச்சு எடுத்துக்கறோம்?'

வெடிமருந்தாய் தரமாட்டார்கள் என்று புரிந்து கொண்டு கேட்டார்கள்.

''நீயே வாங்கிக்க வேண்டியதுதானே.''

''எங்க பேரு வெளிய தெரியாம இருக்கறது நல்லதுங்க. அரசியல்ல எது நடக்கும்னு சொல்ல முடியாது. இன்னிக்கு ஆதரிக்கிற கவர்மெண்ட் நாளை எதிர்க்கும்.''

''சரி... எத்தினிக்கு வேணும்.''

''பத்து லட்ச ரூபாய்க்கு வேணும்.'' பெட்டி பிரித்து காட்டினார்கள். மூச்சடைத்து போயிற்று.

''உங்களுக்கு கமிஷன் கொடுத்திர்றண்ணே! பேக் பண்ணி ராமேஸ்வரம் எடுத்தாந்துருங்க.''

பத்து லட்சம் சரக்கு வாங்கி அதில் ஒரு லட்சம் தான் ஒதுக்கி கொண்டு ஒன்பது லட்சத்துக்கு கமிஷன் வாங்கி சரக்கை ராமேஸ்வரத்துக்கு கைமாற்றிக் கொடுத்துவிட்டு காசோடு ஊருக்கு வந்தார்.

தமிழர்கள் எங்கே எப்படிச் செத்தாலும் இங்கே தீபாவளி குறைவர நடந்தது. சிந்தாதிரிப்பேட்டை வீட்டுக்கு பெட்டிப் பெட்டியாய் பணம் வந்தது.

பிள்ளைகள் படுக்கைக்குக் கீழே அப்பா வைத்த பணத்தை வியப்போடு பார்த்தார்கள். முகர்ந்து முகர்ந்து பீரோவில் அடுக்கினார்கள்.

''இதுங்களுக்கு ஏதாவது பண்ணலாமே.'' அமிர்தவல்லி கெஞ்சினாள்.

''இதுங்களுக்கு என்னா வேணும். உடுப்பும், சோறும் தானே. அதுக்கு எதுக்கு எதுனா குறை இருக்கா. இப்பவே செயினு, மோதிரம்னு போட்டா பணத்து அருமை புரியாது போயிடும். எனக்கு துட்டு எப்பவும் தேவைப்படும். இன்னிக்கு ஒரு லட்ச ரூபா அடுத்த வருஷம் முக்கா லட்சமா நிக்குது. அம்பதாயிரம் ரூபா கைல வச்சிக்கிட்டு மிச்சமெல்லாம் வியாபாரத்துல போடப் போறேன். சிலோனுக்கு மிளகா, தனியா, பருப்பு கேக்கறாங்க. அந்தப் பக்கம் திரும்பப் போறேன். நான் காசுக்கு வாங்கி கடனுக்கு தரப்போறேன். ஒரு படி பருப்பு இங்க பத்து ரூபா. சிலோன்ல முப்பது ரூபா. என் விலை இருபது ரூபா. மூணு நாள்ல துட்டு ரெட்டிப்பாகும். துட்டை துட்டா வச்சுக்கறதுதான் நல்லது.''

அந்த நேரம் பாஸ்போர்ட் விசா ஏதுமில்லை. கள்ளத் தோணிக்கு நல்ல தோணி என்று பெயர் வந்து விட்டது.

காசாகத் தரமுடியாதபோது தமிழர்கள் நகையாக தங்கமாக, சிங்கப்பூர் சரக்காக பண்டமாற்று செய்தார்கள்.

ஒரு சமயம் வீட்டில் நானூறு சவரன் நகை இருந்தது. அவைகளில் தாலிகளும் கூட இருந்நன

''தாலி வாங்கறது நல்லதா...'' அம்மா கவலைப்பட்டாள்.

''இது அவனுக்கு தாலி. எனக்கு தங்கம்.'' அருணாசல முதலியார் வட இந்திய பனியா மாதிரி பேசினார்.

அந்த தாலிகளை உருக்கி விற்று காசாக்கினார். விற்ற காசுக்கு டீசல், கெரஸின், அரிசி, பருப்பு, கோதுமை,



மிளகாய், தனியா என்று கப்பலேற்றினார். எந்த லைசென்ஸும் இல்லாமல் துணிந்து ஏற்றுமதி செய்தார். பாறை வெடிமருந்துக்கு மூன்று விலை தரப்பட்டது. பாறை வெடிகளை அங்கங்கே வாங்கி ஒரு லாரி லோடு ஏற்றி முல்லைத் தீவு போயிற்று.

காசு பீரோவில் எல்லா தட்டுகளிலும் இருந்தது.

சிலோன் தமிழர்கள் சென்னையில் நெஞ்சு நிமிர்த்தி நடந்தார்கள். அவர்களுக்குள்ளே பிரிவினை வந்து நடுத்தெருவில் சுட்டுக் கொண்டார்கள். தமிழகம் விழித்தது. இது சரியா என்று தலை சொறிந்து கொண்டது.

''உங்க சண்டைய உங்க ஊர்ல வச்சுக்கடா. இங்க எதுக்கு அடிச்சுக்கறீங்க'' என்று முறையிட்டது.

அவர்கள் வீடிழந்தவர்கள், விலாசமிழந்தவர்கள், சிங்கள ராணுவத்துக்கு தந்தையும், தாயையும் பறிகொடுத்தவர்கள், தம்பியின் இடுப்பில் வெடிமருந்து கட்டி போலீஸ் ஸ்டேஷன் தகர்த்தவர்கள், கண் முன்னே தினம் சாவு பார்த்தவர்கள், சந்தோஷம் மறந்தவர்கள், சடங்கு சம்பிரதாயம் மறந்து போனவர்கள், செய் அல்லது செத்து மடி என்று கடைசி கட்டம் வந்து விட்டவர்கள்.

அருணாசல முதலியார் விலக முயற்சித்தார். வீட்டுக்கு வந்து ஈழத் தமிழர்கள் நெற்றிப் பொட்டில் துப்பாக்கி வைத்தார்கள்.

''எங்களை வச்சு சம்பாதிச்சேல்ல. இப்ப ஒதுங்கினா என்ன அர்த்தம்... எங்களுக்கு வெடிமருந்து வேணும்...'' கேட்டார்கள்.

''அதெல்லாம் முடியாது. எங்க கவர்மெண்ட் தொந்தரவு பண்ணும்.''

"சரி... அப்ப மிளகாய் கொடு. அரிசி கொடு. டீப்பொட்டலம், காபிப் பொடி, மருந்துசாமான் கொடு."

ஆறு லட்ச ரூபாய்க்கு அவர்கள் கேட்டது வாங்கினார். கள்ளத்தோணியில் ஏற்றினார். காசுக்கு காத்திருந்தார். தோணி புறப்பட்டுப் போயிற்று. பின்னால் இன்னொரு தோணியில் துரத்த துப்பாக்கியால் வானம் சுட்டார்கள். திரும்ப வேண்டியதாயிற்று.

'சரி... இருபது லாபத்தில் ஆறு நஷ்டம் என்று ஊர் திரும்ப மறுபடி வந்தார்.

"தப்பு நடந்துவிட்டது. காசு இல்லை. சாமான் அவசியமாகியது. அதனால் அப்படி நடந்து கொள்ளும்படியாகி விட்டது."

போராளிகளுக்கு உதவுவதில்லை என்று அவர் தீர்மானமாய் மறுக்க,

"சரி... சிலோன் வியாபாரியை அழைத்து வருகிறோம். உதவி செய்" என்றார்கள்.

ஆறு லட்சம் கடனை மூன்று தவணையில் அடைத்தார்கள். நகையாய் கொடுப்பதை மறுக்க வேண்டாம் என்றார்கள். இந்த முறை அவர்கள் கொடுத்தது கோவில் நகை.

எந்தக் கோவில் நகை என்று தெரியவில்லை. ஆனால், கோவில் நகை. அதை அமிர்தவல்லிக்கு அருணாசல முதலியார் காட்டவில்லை. அதே நேரம் அதை எங்கேயும் விற்க முடியவில்லை. கை காசு போட்டு வாங்கிய சரக்கு கரை சேர்ந்து விட்டது. அருணாசல முதலியார் அதற்குமேல் வியாபாரம் தொடர முடியாமல் தவித்தார், ஒரு சிலோன்



தமிழன் ஓடிவந்தான். போலீஸ் ரெய்ட் வரும் போலிருக்கிறது. நகையை அப்புறப்படுத்துங்கள் என்று பதறினான்.

சிந்தாதிரிப்பேட்டையிலிருந்து நகையை எடுத்து சௌகார்பேட்டை பழைய வீட்டில் வைத்தார்.

மறுநாள் வீடு உடைக்கப்பட்டு நகைகள் திருடு போயிருந்தன. இதைப் பற்றி எங்கும் சொல்ல முடியவில்லை.

எவரிடமும் பகிர்ந்துகொள்ள முடியவில்லை. நெஞ்சு குமைந்து எரிந்தது. நிரந்தரமாய் ஒரு துக்கம் இருந்தது. அருணாசல முதலியார் நாற்பத்தோரு வயதில் துக்கம் மறக்க குடிக்க ஆரம்பித்தார். அதிகம் குடித்ததால் கொத்தவால் சாவடி சேறில் விழுந்தார். வெள்ளைச் சட்டை அழுக்காகியது. வேட்டி கிழிந்து தொங்கியது.

## 6

தமிழனுக்கு குடிக்கிறவனைக் கண்டால் இளக்காரம் கேலி. வட இந்திய பனியாவுக்கு குடிக்கிறவனைக் கண்டால் ஒரு பயம், அருவருப்பு. குடிப்பது, குடிப்பவர்களுக்கு நடுவேகூட பாராட்டப்பட்டதில்லை. குடித்துவிட்டு கன்னத்தில் அறைபவனை குடிப்பவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. இன்னொரு முறை குடிக்கக் கூப்பிடுவதில்லை. குடிக்காரர்களிலேயே மிகக் கேவலமானவன் கம்பெனி இல்லாது குடிப்பவன்தான்.

பேசக்கூட ஆள் இல்லாமல் குடிக்கிறோமே என்கிற வேதனை போதை ஏறியதும் அதிகம் பேச வைக்கிறது.

''தம்பி இங்க வாப்பா... நீ படிச்ச புள்ளதானே... ஈழத் தமிழனைப் பத்தி என்ன நினைக்கிற சொல்லு...'' தடுத்துநிறுத்தப்பட்டவன்அவரைத்தீர்க்கமாய்பார்த்தான்.

''எனக்கு ஒண்ணும் தெரியலை'' என்றான்.

''தெரிஞ்சதை சொல்லு.'' அவர் ஊக்கப்படுத்தினார்.

''ஒரு சைடு பார்த்தா அநியாயமா சாவறாங்களேன்னு கவலையா இருக்கு. இன்னொரு விதத்துல பார்த்தா இங்க வந்து அடிச்சுக்கிறாங்களேன்னு கவலையா இருக்கு.''

''திருட்டுப் பசங்க...'' அருணாசலம் கத்தினார்.

''தப்பா பேசாதீங்கய்யா.''

''பேசுவேன். ஊர் பொம்பளை தாலி அறுக்கிற திருட்டுப் பசங்க.''

''ஆயிரம் பேர்ல ரெண்டு பேர் திருடியிருப்பான். அதுக்காக எல்லாரையும் சொல்லிடறதா?''

''நான் சொல்றேன், அத்தினி பேரும் கெட்ட பசங்க.''

''அவனவன் உயிருக்கு துணிஞ்சு போராடிட்டிருக்கான். நீங்க அசிங்கமா குடிச்சுப்புட்டு பேசறீங்களே.''

''நான் குடிக்கிறதுக்கே அவன்தான்டா காரணம்.''

தள்ளாடி அவன் மீது மோதினார். அவன் நிலைமை சரியில்லை என்று நகரத் தலைப்பட்டான்.

''என்னை அநியாயமா ஏமாத்திட்டீங்களேடா பாவிகளா...'' அவனைத் துரத்திக் கொண்டு ஓடினார். அவன் தடுத்து நிறுத்தினான்.

''நீ ஈழத் தமிழன்தானே...'' அவன் சட்டையை கொத்தாய் பிடித்துக் கொண்டார். ''மெட்ராஸ்ல தமிழன் எங்கடா இருக்கான். மெட்ராஸ்ல இருக்கறவனெல்லாம்



சேட்டு கம்மனாட்டிங்கதான். தமிழன்னா மதுரைல இருக்கறவன்தான் தமிழன்.''

''யோவ், சட்டையை விடுய்யா.'' அவன் உதறினான்.

''நான் மதுரை தமிழண்டா.''

''குடிச்சுட்டு பேசறதுல இருந்தே தெரியுதே.'' அவன் கை உதறினான்.

''டேய், நீ என்னைச் சொல்லு, என் ஊரைச் சொல்லாத.''

''நான் சொல்றது இருக்கட்டும். நீ உன் ஊரைச் சொல்லாத இப்ப. நீ ஊரைச் சொன்னா உன் ஊருக்குத்தான் அசிங்கம்.''

அவன் அவர் கையை உதறி தெருவில் ஓடினான். அருணாசல முதலியார் துரத்திக் கொண்டு ஓடினார்.

''சாமி நகைய குடுத்துட்டு ஏமாத்திட்டியேடா பாவி'' என்று பின்னால் ஓடினார். தடுக்கி விழுந்தார்.

''டேய்... நீ எங்கிட்டருந்து தப்பிக்க முடியாது. நான் மதுரைக்காரன்'' என்று கத்தினார்.

கொத்தவால் சாவடி பனியாக்கள் பயந்து கதவுகளை அடைந்துக் கொண்டார்கள்.

''அருணாசல முதலியார் சரியில்லை. அவர்கிட்ட வச்சுக்காதே'' என்று ஒருவருக்கொருவர் போன் போட்டு சொன்னார்கள். வீட்டில் வந்தும் உரக்கக் கத்தினார். அவர் வீதி வீட்டுக்குள் எட்டிப் பார்த்து சிரித்தது. அவரைப் பற்றி எல்லோருக்கும் இழிவாய் தோன்றியது.

குடிக்கு கவலை காரணம். கவலைக்கு குடி காரணம் கமிஷன் ஏஜெண்டான அவரை கொத்தவால் சாவடி சுத்தமாய் புறக்கணித்தது. பெரிய தொகை புரட்ட முடியவில்லை. அதனாலென்ன, சிறு தொகைக்கு வியாபாரம் செய்வோம்

என்று நடை பாதைக்காரர்களுக்கு கடன் கொடுக்க, அவர்கள் காசு இல்லை என்று கண்ணீர்விட்டு அழுது குவார்ட்டர் பாட்டிலைக் கொடுத்துனுப்பினார்கள். குடித்து ஆடும்படி செய்துவிட்டு உன் கடனை நேத்திக்கே குடுத்துட்டேனே, குடிச்சுட்டு எங்கவுட்டுட்டியோ'' என்று பொய் சொன்னார்கள்.

அதட்டி கேட்டபோது அம்பது பேர் முன்னால் கற்பூரம் ஏற்றி சத்தியம் செய்தார்கள்.

ஏழைகளுக்கு சின்னப் பணக்காரன் மீது எப்போதும் கோபம் உண்டு. நம்ம மாதிரி மூட்டை தூக்கினவன்தானே என்று இளக்காரம் உண்டு. அவர் போட்ட காசு பல இடங்களிலும் முடங்கியது. வீடு அடமானம் வைத்து அடுத்த முறை பட்டாசுக்கு பணம் கட்டிவிட்டு வீடு வந்தார். வந்து இறங்கிய மறுநாள் சிவகாசியில் தீ விபத்து, இருபது பேர் மரணம் என்று சொன்னார்கள். அவர் காசு கொடுத்திருந்த புதுக்கம்பெனி வெறும் கறுப்புச் சாம்பலாய் கிடைத்தது. அவன் தன் வீட்டை அடகு வைத்து கம்பெனி துவக்கியிருந்தான். அவன் போதாத காலம். தீப்பற்றிக் கொண்டது. சிவகாசியில் குழந்தைகள் வேலை செய்யும் கொடுமை பற்றி பத்திரிகைகள் குற்றம் சொல்லின. செத்துப் போனவர்களில் எட்டுப் பேர் குழந்தைகள் என்று குற்றம் சாட்டின. அரசாங்கம் விழித்துக் கொண்டு எல்லா தொழிற் சாலைகளிலும் சோதனை போட, சிவகாசியே ஒரு மாதம் அடைந்து போயிற்று.

இருக்கிற காசை இறந்தவர்க்கும், கைகால் இழந்த வர்க்கும் நஷ்டஈடாய் கொடுத்துவிட்டு அந்த பட்டாசு தொழிற்சாலை முதலாளி காணாமல் போனான். ஒரு மாதம் கழித்து மஞ்சள் நோட்டீஸ் கொடுத்தான். ஒரு பைசாகூட திருப்பித்தர முடியாத நிலையில் இருப்பதாகச் சொன்னார்.



அருணாசலம் பித்துப் பிடித்தவன் போல் ஆனார். அதிகம் குடித்தார். குடிக்க வேண்டாம் என்று தடுத்த மனைவியை செருப்பால் அடித்தார். குழந்தைகளை நெஞ்சில் கை வைத்து பின்னே தள்ளினார்.

தம்பியும் அம்மாவும் அடிபடுவது காணாது மூத்த பிள்ளை கத்தி எடுத்துக் கொண்டு அவர் மீது பாய்ந்தது. அருணாசலம் அவன் மீது பாய்ந்து கத்தியைப் பிடுங்கிப் போட்டு வெறியோடு பெல்ட்டால் அடித்தார். மூத்தவன் அடி தாங்காமல் மயங்கி விழுந்தான்.

பிள்ளை செத்துப்போய்விட்டான் என்ற பயத்தில் ஊரைவிட்டு ஓடினார். எங்கோ குண்டூர் பக்கம் மிளகாய் மார்க்கெட்டிலிருந்து இப்போதைக்கு வைத்து கொள்ளுங்கள் என்று ஆயிரம் ரூபாய் அனுப்பினார். மெல்ல, மெல்ல வறுமை அந்தக் குடும்பத்தைத் தழுவிக் கொள்ள ஆரம்பித்தது. வீடு கடனில் மூழ்கியது. வேறு வழியில்லாமல் மதுரைக்கு அடுத்து உள்ள சொந்த கிராமத்தில் குடிபெயர்ந்தது. அப்பா வளர்ந்த வீட்டில், அந்தப் பாழடைந்த ஓட்டுக் கூரைக்குக் கீழ் அந்தக் குடும்பம் தன்னைப் பத்திரப்படுத்திக் கொண்டது.

அவர்கள் நிலை கண்டு ஊர் முதலில் ஆச்சரியப் பட்டது.

''அருணாசலம் துடியான ஆளுப்பா... எங்கயாவது போய் எதுனா செய்துட்டு கொண்டு வருவான். முன்ன மாதிரி அடபுடான்னு பேசிடாதீங்க.'' அந்தக் குடும்பத்துக்கு முடிந்த அளவு கடன் உதவி செய்தது.

ஆனால், மூன்று மாதமாகியும் அருணாசல முதலியார் வரவில்லை. காசும் அனுப்பவில்லை. ஊர் பின்வாங்கியது. உறவுகள் புறம் பேசின. ஒரு வருடம் ஆகியும் தகவல் இல்லாததால் ஊர் கரித்துக் கொட்டியது.

''என்னத்துக்குடா படிப்பு? எதுனா வேலை செய்யேன்டா...'' என்று மூத்தப்பிள்ளைக்கு கட்டளை யிட்டது.

மதுரை பஞ்சாலையில் பையன் பஞ்சு பொறுக்கி னான். அம்மா சட்டம் சுற்றினாள். அமிர்தவல்லி தாலி தவிர அத்தனை நகையும் அடகு வைத்தாள். பிறகு இரண்டாவது பிள்ளை கல்லூரிப் படிப்புக்கு என்று தாலியையும் அடகு வைத்தாள்.

கொடிது கொடிது வறுமை கொடிது.

அதனினும் கொடிது இளமையில் வறுமை.

வீட்டில் ஒரு பிடிகூட அரிசியில்லாத ஒரு விடியல் வேளையில் அமிர்தவல்லி மாமனாரின் படத்தை வைத்துக் கொண்டு அழுதாள்.

''உம்ம வாக்கு பலிச்சிருச்சே... உம்ம வாக்கு பலிச்சிருச்சே, நீங்க சந்நியாசியா போயும் சாபம் தீரலியே'' என்று அழுதாள்.

அன்று கல்கத்தாவிலிருந்து மூவாயிரம் ரூபாய்க்கு தந்தி மணியார்டர் வந்தது. வாங்கின கடன்களைத் திருப்பிக் கொடுத்தது போக ஒரு மாதம் அந்த வீடு ஒழுங்காய் சாப்பிட்டது.

அப்பா எதுவும் செய்து எப்படியாவது காசு கொண்டு வருவார் என்று பிள்ளைகள் நம்பினார்கள். மறுபடியும் காசு வரும் என்று காத்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனால், காசும் வரவில்லை. ஆளும் வரவில்லை.

மறுபடியும் குடிச்சிட்டுதான் அலையறான். முன்ன மெட்ராஸ்ல அலைஞ்சான். இப்ப கல்கத்தாவுல அலையறான். அவ்வளவுதான் வித்தியாசம்.



ஒரு நாள் விடியலில் வீட்டுத் திண்ணையில் யாரோ படுத்திருப்பது பார்த்து அம்மா மூத்த பிள்ளையை எழுப்பினாள். மூத்தவன் கம்பளியும் தாடியுமாய் கிடந்த கிழவரை உலுக்கி எழுப்பினான். எழுந்ததும்தான் தெரிந்தது, அது அப்பா என்று.

உள்ளே கூட்டிப் போகும் போதுதான் தெரிந்தது, இடது கை இடதுகால் ஸ்வாதீனமில்லை என்பது. உள்ளே விசாரித்த பிறகுதான் தெரிந்தது, கல்கத்தாவில் உதைத்து அனுப்பியிருக்கிறார்கள் என்பது. அவர் பையைச் சோதனை போட்டதில் சில உடைகளும் அரை பாட்டில் பிராந்தியும் தான் இருந்தன.

இனி குடிக்கவே கூடாது என்று மூத்தவன் சத்தம் போட்டான். அமிர்தவல்லி சத்தியம் வாங்கினாள். இரண்டு பேரும் வேலைக்கு போன பிறகு அவர் சாமி உண்டியலை உடைத்து பின் வழியே அடுத்த கிராமத்துக்கு போய் குடித்துவிட்டு ஊர் கூட்டினார். ஊர் அவரை பேச தூண்டி விட்டு வேடிக்கை பார்த்தது. அவர் வாழ்ந்த கதையும் வீழ்ந்த கதையும் அடடா... அப்படியா... அப்புறம் என்னாச்சு என்று ரசித்து கேட்டது.

''கல்கத்தாவுல எதுனா குடித்தனம் வச்சிருக்கியா இல்ல, குண்டூர்ல எதுனா வுட்டுட்டு போயிட்டியா?''

ஆனால், அப்பா ராமன். எத்தனை குடித்தாலும் ஏக பத்தினி விரதன். அமிர்தவல்லி என்ற மனைவியைத் தவிர வேறு யாரையும் அண்டவிடாதவன். அந்த ஒரு நல்ல குணம் தவிர வேறு எதுவும் சொல்லிக் கொள்வது போல இல்லை. எத்தனை முறை சத்தியம் செய்தாலும் அவரால் குடிக்காமல் இருக்க முடியவில்லை.

அவர் லட்சம் லட்சமாய் சம்பாதித்த கதைகளை நாலு பேருக்கு நடுவே சொல்லிக் கொள்ளாமல் அவரால் இருக்க

முடியவில்லை. தம்பிகளுக்கு கடிதம் எழுதினார். அவர்கள் வந்து பார்த்து கொஞ்சம் காசு கொடுத்தார்கள்.

''எனக்கு சோத்துக்கு காசு குடுக்காதடா. சொந்தமா தொழில்பண்ணறதுக்கு எதுனா குடு.''

''உங்களுக்கு உடம்பு சரியில்லையே... எப்படி வியாபாரம் பண்ண முடியும்?''

'' நீ அம்பதாயிரம் ரூபா தரேன்னு சொல்லு. நான் கட்டை வச்சு நடந்து காட்டறேன்.'' ரெண்டு தம்பிகளும் கூடிப்பேசி ஆளுக்கு இருபதாயிரம் என்று காசு கொடுத்து விட்டுப் போனார்கள்.

அருணாசலம் முதலியார் இரண்டாவது பிள்ளையைத் துணைக்கு அழைத்துக் கொண்டு வெள்ளைச் சட்டையும் வெள்ளை வேட்டியுமாய் அவன் தோளில் கை வைத்தபடி மதுரை மார்க்கெட்டுக்கு மல்லிகைப்பூ வியாபாரத்துக்குப் போனார்.

ஆறு மணிக்கு மார்க்கெட்டுக்கு வந்த பூவை ஒன்பதரை மணிக்கு ஏர்ப்போர்ட்டுக்கு அனுப்பிச்சா ஒரு கூடைக்கு அஞ்சு ரூபா நிக்குது. இருநூறு கூடைகள் வாங்கினார்.

போன் போட்டு பிள்ளையிடம் ஏரோபிளேன் கிளம்பி விட்டதா என்று கேட்கச் சொன்னார். விமானம் ஒழுங்காகக் கிளம்பி விட்டது. இவர் வாங்கிய மல்லி ஏர்போர்ட் போக வில்லை. மூன்றுசக்கர டெம்போ முன்பக்கம் பஞ்ச்சராகி எதிர் வண்டியில் முட்டி குப்புறக் கிடந்தது. இவர் மல்லிகைப்பூ மதுரையின் பதினோரு மணி வெயிலில் மலர்ந்து மங்கிப்போயிற்று.

''நீ போ. வரேன்.'' பிள்ளையை வீட்டுக்கு அனுப்பினார். மறுபடியும் காணாது போனார்.

ஒரு வாரம் கழித்து ராமேஸ்வரத்தில் அவர் இருப்பதாக தகவல் வந்தது. தம்பிகளுக்கு தந்தி பறக்க, அவர்கள் தேடிக்கொண்டு வந்தார்கள்.



''அப்பா சாமியாராயிட்டாரா?'' இரண்டாவது பிள்ளை ஆவலாகக் கேட்டான்.

''உங்கப்பனா... சாமியாரா... அதுக்கு ஒரு யோக்கியதை வேணும்டா. சாராயக் கடைல இருநூத்தி நாப்பது ரூபா கடன் அடைச்சுட்டு இவரைக் கூட்டி வரோம்.'' சீறினார்கள்.

''குடிக்கலேன்னு சொல்லுங்கண்ணே. உங்க குடும்பத்துக்கு எதுனா செய்யறோம்.'' கட்டளை போட்டார்கள்.

அப்பா மறுபடி சத்தியம் செய்தார். நாலு நாள் குடிக்காமல் இருந்தார். ஆனால், அவர்களிடமிருந்து உதவி எதுவும் வரவில்லை.

வீடு மறுபடியும் திண்டாடியது. அப்பா இந்தமுறை பித்தளை தவலையை எட்டு ரூபாய்க்கு விற்று குடித்து விட்டு வந்தார். ''இருவது வருஷத்துல எழுவது லட்ச ரூபா சம்பாதிச்சவன்டா'' என்று ஏதோ கணக்கு சொன்னார். அவர் கணக்கு யாருக்கும் புரியவில்லை. அவர் குடிப்பதை எவராலும் நிறுத்த முடியவில்லை.

வெற்றி போதையான விஷயம். வெற்றி போதை இல்லாதபோது தோல்வியைத் தாங்கமுடியாதவர்களுக்கு வேறு போதை தேவைப்படுகிறது. வேறு போதை வந்துவிட்டால் வெற்றி என்கிற போதை வரவே வராது.

கடைசி வரை அருணாசலத்துக்கு வெற்றி என்கிற போதை வரவேயில்லை. குடி குடலைக் கெடுத்தது. நரம்பைத் தாக்கியதும் படுக்கையில் கிடத்தியது. ஆனால், படுத்துக் கொண்டிருந்தபோதும் இடது காலை மடித்து வலது காலை அதன் மீது வைத்து, ''எங்கிட்ட மட்டும் ரெண்டு லட்சம் ரூபா குடுங்கடா... மறுபடியும் முதலியாரா நின்னு காமிக்கிறேன். எனக்கு நோய் உடம்புல இல்லடா, மனசுல. எனக்கு மருந்து ஊசில இல்லடா, பணத்துல

இருக்கு. ஒரு கட்டு நூறு ரூபா கொண்டாந்து என்னை மோந்து பாக்கச்சொல்லு. நான் எழுந்து நின்னுடுவேன். ஒரு பொட்டில பணம். கொண்டாந்து வை. நான் எழுந்து நடப்பேன். நானூறு பவுன் நகை பாத்திருக்கியாடா நீ. நான் மூட்டை கட்டி பரண்ல வச்சிருந்தேன். ஆயிரம் பேருக்கு சோறு போட்ட கைடா இது. அறுவத்துமூவர்க்கு மோர் ஊத்தின கை இது. தேர் அன்னிக்கு பத்து கூடை புட்டு தூக்கின தோளு இது. அமிர்தவல்லி எதுனாதுட்டு கிடைச்சா புட்டு பண்ணேன். சாப்பிடணும் போல இருக்கு. கூரை பார்த்து பேசுவார். தன் நிழலைப்பார்த்து பேசுவார். காரை பெயர்ந்த சுவரைப் பார்த்து பேசுவார். ஒரு நாள் பேசவில்லை. ஆனால், கால்மீது கால் மட்டும் இருந்தது. எடுத்துக் கீழே இறக்கும்போது மறுபடி கால் மேலே போகவில்லை. பிரிந்து எதிர் எதிர் திசை பார்த்தது. அப்பா, மூட்டை தூக்கிய அருணாசல முதலியார் இடது கையாலும் வலது கையாலும் காசு சம்பாதித்த அருணாசல முதலியார் இறந்துபோனார். அவர்களை விட்டுப் பிரிந்து போனார். இந்தப் பிரிவு நிரந்தரப் பிரிவு.

எத்தனைதான் குடிகாரனாய் இருந்தாலும் அந்த வீட்டாரால் தாங்க இயலாத பிரிவு.

**கோ**விந்தராஜன் எனக்கு கதை சொல்லிவிட்டு கண்களைத் துடைத்துக்கொண்டான். ஓடும் ரயில் கம்பியில் முகம் புதைத்துக் கொண்டான். விக்கி விக்கி அழத் துவங்கினான்.

''சீனு சார், அவரை எல்லாரும் குடிகாரன்றாங்க சார்... அவர் தோத்துப் போய் தவிச்சதையே குத்தம் சொல்றாங்க. மூட்டை தூக்கினவரு லட்சம் லட்சமாய் சம்பாதிச்சது மறந்து போயிட்டாங்க சார். ஆனா, எங்களால அதை மறக்க முடியலை சார்.



ஒவ்வொரு நாள் ராத்திரியும் சாப்பிட்ட பிறகு தோல் பையைத் திறப்பார். நான் அண்ணன், தங்கச்சி மூணு பேரும் அவரைச் சுத்தி உக்காந்துப்பம். பத்து ரூபாய் எல்லாம் நான் அடுக்குவேன். அஞ்சு ரூபாய தங்கச்சி அடுக்கும். ரெண்டு, ஒண்ணு சில்லறை எல்லாம் அண்ணன் எண்ணுவான். அப்பா அம்பதும் நூறும் எடுப்பாரு. இருவது ரூபா அம்மா எடுப்பாங்க. சில சமயம் சரியா எண்றதுக்கு ஒன்னவர் ஆயிடும் சார்.

ஒரு நாள் எழுவத்தெட்டாயிரத்து தொள்ளாயிரத்து நாப்பது எடுத்தோம். அன்னிக்கு ஆளுக்கு நூறு ரூபா கொடுத்தார். இப்படிப் பலநாள் காசு எண்ணிருக்கோம் சார். எப்படிப் போச்சுன்னே தெரியலை இது சாபமான்னே தெரியலை.

ஆறு தலைமுறை சாபம்னு எங்க தாத்தா சொன்னாராம். நான் ஆறாவது தலைமுறை. நான் கஷ்டப் பட்டுட்டேன். பள்ளிக்கூடத்துல மதிய உணவுத் திட்டத்துல சாப்பிட்டு வளர்ந்தவன் சார். எங்கப்பாவைக்கூட நான் மறந்துடலாம். ஆனா பகல் சோறு போட்டாரே... பெருந்தலைவர் காமராஜர், அவரை மறக்கவேமாட்டேன். அந்த சோறு இல்லைன்னா செத்துட்டிருப்பேன் சார், அதுக்குத்தான் பள்ளிக்கூடம் போனேன். அதனால்தான் படிச்சேன். இல்லேன்னா நானும் பஞ்சு பொறுக்கப் போயிருப்பேன் சார்! பி.காம். முடிச்சுட்டு சினிமாவுக்கு வந்துருக்கவே முடியாது. சினிமாக்கு போறியா... சினிமாவும் ஒரு சூதாட்டம். போ... போய் ஜெயிச்சுட்டு வா. தோத்துட்டு வராதே. ஜெயிச்ச காசை என்னுதில்லைன்னு எங்கயாவது கொடுத்துரு. எங்கயாவது கொடுப்பானேன் என்கிட்ட கொடுத்துருன்னு சித்தப்பால்லாம் சொன்னாங்க.

அப்பாவ கடைசி நேரத்துல வந்து பார்க்கலை சார்! மருந்துக்கு காசு கேட்டப்ப முடியாதுன்னுட்டாங்க. நான்

மாசம் ஆயிரம் ரூபா அனுப்பினேன். அதுலதான் மருந்து வாங்கினாங்க.

ஆனா, அப்பாவுக்கு மருந்து ரெண்டு லட்ச ரூபாய். என்னால ரெண்டு லட்ச ரூபா அப்பாவுக்கு தரமுடியலை. இந்தாங்கய்யா போய் வியாபாரம் பண்ணுங்க... அப்படீன்னு அனுப்ப முடியலை.

இந்தப் படம் பார்த்துட்டு எனக்கு ரெண்டு படம் புக் ஆயிருக்கு சார். ரெண்டு படத்துக்கும் ரெண்டு ரெண்டு லட்ச ரூபா சம்பளம் பேசியிருக்கேன். பத்தாயிரம், பத்தாயிரமா இருபதாயிரம் அட்வான்ஸ் வாங்கியிருக்கேன். முதப்படத்து சம்பளமா எழுபத்தஞ்சாயிரம் செக் வச்சிருக்கேன். ஒரு மாசம் முன்னாடி இந்த காசு கொடுத்திருந்தா கூட எங்கப்பா எழுந்து நின்னுருப்பாரு.

ஆனா, அவர் செத்துட்டிருக்கற நேரத்துலதான் இந்த மூணு காசும் என் கைக்கு கிடைச்சுது.

எனக்கு இப்ப பயமா இருக்கு சார். எத்தனை ஜெயிச்சாலும் நானும் ஒண்ணுமில்லாத சாவேனோன்னு பயமா இருக்கு. அப்ப எதுக்கு ஜெயிக்கணும். ஏன் போராடணும்னு கேள்வி வருது.

ஆறு தலைமுறை சாபமாம். நல்லவேளை எனக்கு கல்யாணமாகி புள்ளை பொறந்தா அவன் இப்படி இருக்க மாட்டான். அவனை இப்படி இருக்க விடமாட்டேன். இப்பவே தீர்மானம் பண்ணிட்டேன். இந்த எழுபத்தஞ்சாயிரம் என்னதுல்லன்னு தீர்மானம் பண்ணிட்டேன். இந்த இருபதாயிரத்துலதான் எங்கப்பா காரியம் நடக்கும். இவ்வளவுதான் இருக்குன்னு சொல்லிடுவேன். இன்னும் படம் வந்து அது நல்லா ஓடி காசு வந்தா அம்மாவை மெட்ராஸுக்குக் கூட்டிக்கணும்.



அண்ணனை மானேஜரா போட்டுக்கணும். தங்கச்சிக்கு கல்யாணம் பண்ணணும். நல்லதோ கெட்டதோ நாம பிரியக் கூடாதுன்னு சத்தியம் வாங்கணும்.

இது என் காசில்லை... இது என் காசில்லைன்னு கடைசி காலத்துக்கு சேர்த்து வைக்கணும். பத்து வருஷ டெபாஸிட், இருபது வருஷ டெபாஸிட்னு முடக்கி வைக்கணும்.

ஜெயிச்சாலும் பயமா இருக்கு, ஜெயிக்கலேன்னாலும் பயமா இருக்கு. எனக்கு மட்டும்தான் இப்படியா? எல்லார் வாழ்க்கையும் இப்படித்தானா? எங்கப்பா நல்லவர் சார். லட்ச லட்சமா சம்பாதிச்சவர் சார்.'' அவன் பேசிக் கொண்டிருக்க, நான் மௌனமாய் கேட்டுக் கொண்டிருந்தேன். இரண்டு பேரும் எப்பொழுது தூங்கினோம் என்று தெரியவில்லை.

மதுரையில் என்னை வரவேற்க மாலையோடு இலக்கிய நண்பர்கள் காத்திருந்தார்கள். கோவிந்தராஜனை அடையாளம் கண்டுகொண்டார்கள். மதுரை விநியோகஸ்தர் அவனுக்கு கார் எடுத்து வந்திருந்தார்.

''இது நல்லது தம்பி! ரொம்ப நல்ல சகுணம் இது. சினிமா செண்டிமெண்ட், பொய்யா போனதா சரித்திரமே இல்லை. முதப்படம் வெளியிடற சந்தோஷத்தின்போது துக்கத்துல இருந்தவங்கெல்லாம் கடைசி முட்டும் ஜெயிச்சாங்க... ஓஹோன்னு வந்துருக்காங்க. நான் ஆறேழு பேரை சொல்ல முடியும். அது இப்ப வேணாம். மனசு கலங்காம வண்டி எடுத்துட்டுப்போய் நடக்கறது பாருங்க. அப்புறம் யாரோ ஒரு பெரியவரு உங்க பேரைச் சொல்லி கேட்டுக்கிட்டே இருந்தார். உங்க உறவா என்னன்னு தெரியலை. ஆனா, ரொம்ப தள்ளாட்டம். அதோ... அதோ அங்க இருக்கறவருதான்.''

ஒரு பெரிய கர்டரின் பக்கத்தில் சாய்ந்து உட்கார்ந்திருந்த கிழவரை விநியோகஸ்தர் அடையாளம் காட்டினார். கோவிந்தராஜன் உற்றுப் பார்த்தான். ஹா என்று வியந்தான்.

''ஸீனு சார்... எங்க தாத்தா'' என்று கத்தினான்.

நான் நண்பர்களிடம் பெட்டியைக் கொடுத்துவிட்டு கோவிந்தராஜனோடு விரைந்தேன். கிழவர் தொலைதூரம் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''ஐயா, நீங்க யாரு? என்னைத் தேடினீங்களாமே... நீங் அருணாசல முதலியாரின் அப்பாதானே? நான் அவர் பிள்ளை.'' உரக்க கோவிந்தராஜன் கத்தினான். கிழவர் என்னையும் அவனையும் மாறி மாறி பார்த்தார்.

''கொடிது கொடிது வறுமை கொடிது'' என்றார். எச்சில் விழுங்கினார்.

''அதனினும் கொடிது இளமையில் வறுமை'' என்றார். மறுபடியும் நிறுத்தினார். வானம் பார்த்தார்.

''அதனினும் கொடிது...'' என்னை நோக்கி உற்றுப் பார்த்தார்.

''முதுமையிற் செல்வம்.'' நான் வாக்கியம் முடித்தேன்.

சிரித்தார்.

''சேர்த்து வச்சு என்னா பண்ணப் போற... தின்ன முடியாது. தூங்க முடியாது. என்னா பண்ணப் போற. சொல்லு..''

''என்னா பண்ணச் சொல்றீங்க.'' கோவிந்தராஜன் குரலில் ஒரு கோபம் இருந்தது.

''சும்மா இரு.'' அவர் சொன்னது கோவிந்தராஜனுக்கு விளங்கவில்லை.



பணம் இருந்தாலும் இல்லாது போனாலும் அலட்டிக்கொள்ளாமல் இருக்க வேண்டும் என்பது அதற்கு அர்த்தம் என்று அவனுக்குப் புரியவில்லை. சும்மா இரு என்று யாருக்கு விளக்கினாலும் சும்மா இருக்க மாட்டார்கள்.

அதெப்படி சும்மா இருக்கறது? சும்மா இருந்தால் சோறு கிடைக்குமா என்று சண்டைக்கு வருவார்கள். சோம்பேறிதான் சும்மா இருப்பான் என்று கொக்கரிப்பார்கள்.

சும்மா இரு என்பது உடம்பையோ, புத்தியையோ சொன்ன விஷயமல்ல. சும்மா இருக்கச் சொன்னது மனசை. வெற்றியிலும், தோல்வியிலும் மனசை விலகியிருக்கச் சொல்லப்பட்ட வார்த்தையிது.

கோவிந்தராஜன் அப்பாவால், அந்த அப்பாவின் மனசால் சும்மா இருக்க முடியவில்லை. ஜெயித்தது தான் என்றும், தோற்றது தான் என்றும் தன்னால் இதற்குப் பிறகும் ஜெயிக்க முடியும் என்றும் மூன்றுவித நினைவுகளால் அலைக்கழிக்கப்பட்டார்.

ஜெயித்தது கடந்த காலம், தோற்றது நிகழ்காலம், ஜெயிக்க முடியும் என்கிற நினைப்பு எதிர்காலம். மனசு மூன்று காலங்களிலும் எல்லோருக்கும் எப்போதும் ஊசலாடிக் கொண்டே இருக்கிறது.

எது நிகழ்காலமோ அங்கு மட்டும் இருப்பதே சும்மா இருத்தல். இந்த வினாடி நிகழ்காலம், அடுத்த வினாடியில் இந்த வினாடி இறந்த காலம். ஒவ்வொரு வினாடியும் தன்னைப் புதுப்பித்துக் கொண்டேயிருத்தல் சற்று கடினமான காரியம்.

''சும்மா இரு சொல் அறவென்றலுமே

அம்மா பொருளொன்றும் அறிந்திலனே.''

எல்லாம் தெரிந்தவர்கூட சும்மா இருத்தல் பற்றி தெரியவில்லை என்று புலம்பியிருக்கிறார்கள்.

கோவிந்தராஜன் அந்தக் கிழவரை உயர்த்தி. ''அப்பா போயிட்டாரு, கரையேத்திட்டு வரலாம், வாங்க'' என்று கூவினான்.

அந்தக் கிழவர் கை உதறினார்.

''அத பார். தண்டாவாளத்துக்கு நடுவுல புல்லு, யாரதுக்கு சோறு போடறது, நான் பார்க்கணும். நீ போ'' என்றார்.

கோவிந்தராஜன் அவரை வெறித்துப் பார்த்தான்.

''நான் உங்களை மெட்ராஸ்ல பார்க்கறேன் சார்!'' என்னை நோக்கி கைகூப்பினான். பெட்டியோடும். விநியோகஸ்தரோடும் நடந்து போனான்.

எனக்கு போட நீட்டிய மாலையை நான் நண்பர் களிடமிருந்து வாங்கி அந்தக் கிழவருக்கு போட்டேன்.

அந்தக் கிழவர், ''அங்க பார்... தண்டவாளத்துக்கு நடுவுல ஒரு புல்லு. அதுக்கு யார் சோறு போட்டது. எந்த அப்பா அதுக்கு சம்பாதிச்சு கொடுத்தது... யாரு காயம்படாத காப்பாத்தறது. அதுக்கு அப்பா இல்லை. அம்மா இல்லை. தானா வளருது. அப்பா அம்மான்னு எதுனா இருந்தாலும் அதுபத்தி தெரியாத வளருது? உனக்குத் தெரியுமோ... அதப் பார்! தண்டவாளத்துல புல்லு..''

நான் மௌனமாய் நின்றேன். அவர் சொன்னது எனக்குப் புரிந்தது போலிருந்தது. உங்களுக்குப் புரிகிறதா என்ற கேள்வி கேட்டுக் கொள்ளுங்கள்.

**முற்றும்**